2/7/29

V2:1197E
N76
217129

A

# எட்டயபுரம் வரலாறு.

1224/98

ஆசிரியர்கள்:

வே. சதாசிவன்.

மா. இராஜாமணி பி. ஏ.

இளசை மணியன்

புகைப்படங்கள்: *B.* வெங்கடேஸ்வரட்டு

P. முத்துத்தேவர்

கருமாத்தூர்

மதுரை

V2:1197.E
N76
217129

மூத்தாளர் சங்கம்

எட்டயபுரம்.

ரம் வரலாறு.

ற்பதிப்பு. ஜனவரி 1976.

விலை: ரூபாய் இரண்டு.

கோவில்பட்டி சரஸ்வதி அச்சகத்தில் அச்சிடப்பட்டு எட்டயபுரம் தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் வெளியிடப்பட்டது.

1224/98

## முன்னுரை.

நாடு என்றால் அதற்கு வரலாறு உண்டு. அதே சமயத்தில் ஒரு நாட்டில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில ஊர்களுக்குத்தான் வரலாற்று நூல் எழுதுவதுண்டு. அந்த வரிசையில் எட்டயபுரமும் ஒன்று என்றால் அது மிகையாகாது.

எட்டயபுரம் வரலாறு என்று கூறினாலே, அது பெரும்பாலும் எட்டயபுரம் ஜமீன் வரலாற்றையே குறிக்கும். எட்டயபுரம் ஜமீன் வரலாறு கி. பி 803ம் ஆண்டுமுத [redacted] சுமார் 1150 ஆண்டுகள் நீண்ட பாரம்பர்யம் கொண்ட வரலாறு ஆகும். அதுமட்டுமல்லாமல் பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களை பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகும்.

முகமதிய படையெடுப்பால் தென்னிந்தியாவில் ஏற்பட்ட அரசியல்மாற்றம், பிற்கால பாண்டியமன்னர்களின் ஆட்சி, நாயக்கர்களின் ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும், கும்பினி ஆட்சியின் தோற்றம், வளர்ச்சி, இறுதியாக ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து நடைபெற்ற தேசிய இயக்கம் ஆகிய சரித்திர நிகழ்ச்சிகளின் பிரதிபலிப்பை எட்டயபுரம் வரலாற்றைப் படிக்கும் போது நாம் உணர முடிகிறது.

எட்டயபுரம் ஜமீனில் கலை, இலக்கியம், இசை நாடகம், நாட்டியம் ஆகியன மிகவும் வளர்ச்சி பெற்றிருந்தன. 17ம் நூற்றாண்டில் எட்டயபுரம் ஜமீனில் வாழ்ந்த கடிகைமுத்துப் புலவர் முதல் 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாகவி பாரதி வரை எண்ணற்ற தமிழ், தெலுங்கு, சமஸ்கிருத புலவர்கள் எட்டயபுரத்தில் வாழ்ந்து இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

லாது எட்டயபுரம் ஜமீனில் அநேக
ரம் வரல ரும். அபிவிருத்தி வேலைகளும் சீராக
ஏற்படுத்தப்பட்டு. விவசாய முன்னேற்றத்திற்கு விவசாய
உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி
செய்யப்பட்டன. எட்டயபுரம் ஜமீன் சமய
பற்ற தன்மையுடன் விளங்கியது என்பதற்கும் சரித்திரச் சான்றுகள் உள்ளன.

இவ்வாறு கலை, இலக்கியம், சமூக நற்பணிகள், விவசாய அபிவிருத்தி வேலைகள் ஆகியவற்றின் முழு வளர்ச்சி பெற்ற எட்டயபுரம் ஜமீனைப்பற்றி அவ்வப்போது எட்டயபுரம் தமிழ் எழுத்தாளர்கள் பத்திரிக்கைகளில் கட்டுரைகள் எழுதி வந்துள்ளார்கள். ஆனால், எட்டயபுரம் சரித்திரத்தை நூல் வடிவில் வெளிக்கொணர நாங்கள் எண்ணி வந்தோம். இதற்கு உறுதுணையாக, டபிள்யூ இ கணபதி பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய 'எட்டயபுரம் வரலாறு' (*Ettayapuram past And Present*) என்ற நூலை டைப்செய்து அமெரிக்காவைச் சேர்ந்த தமிழறிஞர் டேவிட் லூதன் எங்களுக்கு அனுப்பி வைத்தார். எங்களது இம்முயற்சிக்கு உதவிய டேவிட் லூதனுக்கு எங்களின் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வரலாற்று நூலை வெளியிட அனுமதி வழங்கிய கனம் எட்டயபுரம் மகாராஜா அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இந்நூல் எழுதுவதற்கு உதவியாக வேறுபல வரலாற்று நூல்களும், சரித்திரக் குறிப்புகளும் கொடுத்து உதவிய திரு. பத்மைய மணியகாரர், ஜமீன் சிரஸ்தார் திரு. சே. முத்துக்குமாரசாமி பிள்ளை, திரு. வி. பாலகுமார், திரு. கிருஷ்ணன் செட்டியார், திரு. அர்ச்சுனத் தேவர் ஆகியோருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இந்த வரலாற்று நூலை மிகக் குறுகிய காலத்தில் அழகிய முறையில அச்சிட்டு வெளியிட உதவிய சரஸ்வதி பிரஸ் உரிமையாளர் திரு பாலகாஸ அவர்களுக்கும் எங்களது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள கிறோம சரித்திர சம்பவங்களை தொகுத்து இந்த நூலில் வழங்கியுள்ளோம தமிழ் வாசகர்கள் எங்களது இம் முயற்சிக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறோம்.**

எட்டயபுரம்
13, [illegible] 1976

**வே. சதாசிவன், மா. இராஜாமணி**
**இளசை மணியன்.**

# பிஷப் கால்டுவெல்

(டபிள்யூ இ. கணபதி
எழுதிய 'எட்டயபுரம் வரலாறு'
ஆண்டு பிப்ரவரி மாதம் 18ந் தேதி
மாவட்ட வரலாற்று ஆசிரியரும், சிறந்த தமிழறிஞரு
மான பிஷப் கால்வெல் அளித்த அணிந்துரையின்,
சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது)

இது எட்டயபுரம் ஜமீனின் மெச்சத் தகுந்த சிறப்பான வரலாறு ஆகும். திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரம் ஜமீன் மிக முக்கியமான ஜமீனாகும். சென்னை மாகாணத்தில்—ஏன் தென் இந்தியாவிலேயே இலக்கியத் துறையில், கலைத்துறையில், பல புதுமைகள் கண்டது. எட்டயபுரம் ஜமீனாகும் அதுமட்டுமல்லாமல் ஏனைய ஜமீன்களுக்கு எட்டயபுரம் ஜமீன் முன் மாதிரியாக விளங்கியது எனக் கூறினால் அதுமிகையாகாது.

இந்த நூலின் எழுத்துப் பிரதிகளையே நான் மிகவும் கவனமாகப் படித்தேன். இதனால்தான், இதன் சிறப்பைப்பற்றி சிறிது நம்பிக்கையுடன் நான் இங்கு கூறமுடியும் எழுத்தில் அல்லது அச்சில் வெளி வந்த நூல்களில் கூறப்பட்டுள்ள முக்கிய விவரங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த ஜமீனின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய குறிப்புகள், அதை விளக்கக் கூடிய சரித்திர சம்பவங்கள், ஜமீன் குடும்பங்களைப் பற்றிய செய்திகள் ஆகியன இந்நூலில் மிக கவனமாக எழுதப்பட்டுள்ளன.

சரித்திர நிகழ்ச்சிகளை தொகுத்துக் கூறியதுடன் புகழ்பெற்ற ஜமீனின் செம்பாகமான காலத்தை எழுதியுள்ளதால் இதுமிகவும் பாராட்டுதற்குறியதாகும். இந்த மாவட்டத்தின் முன்னேற்றதிற்கு சமூக, பொருளாதார, கல்வி, கலாச்சார வளர்ச்சிக்கு எட்டயபுரம் ஜமீன்தார்கள் சிறப்பாக பணியாற்றினார்கள் என்பதை இந்த வரலாற்று நூல் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. ஆடம்பர வாழ்க்கையில் காலத்தை வீணாக்காமல், எட்டயபுரம் ஜமீன்தார்கள் மக்களின் நல்வாழ்விற்காகவும் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பணியாற்றி. இந்திய ஜமீன்களிலேயே எட்டயபுரம் ஜமீன் மிக உன்னத மான இடம்பெற, எட்டயபுரம் ஜமீன்தார்கள் ஆற்றிய பணி சாலச் சிறந்ததாகும்.

...முத ஆதாரமாகக் கொண்ட...

...மணி தீபிகை—சுவாமி தீக்ஷிதர்

2 சங்கீத சம்பிரதாயபிரயதர்சினி—சுப்புராமதீக்ஷிதர்

3 திருநெல்வேலி சீமை சரித்திரம்
— குருகுஹதாஸ் பிள்ளை

4 எனது நாடக வாழ்க்கை—டி கே. சண்முகம்

5 *Ettayapuram Past And Plesent*
*— By W. E Ganapathy Piltai*

6 *History of the Military Transaictions of the British Nation in Judostan* *— By Robert orme*

7 *The Aristocraey of Southeren India*
*—By A Vadivelu*

8 *Muthusamy Dikshitar*
*—By Justice T. L. Venkatarama Ayyar*


## பிழை திருத்தம்

| | | |
|---|---|---|
| பக்கம் 5 | இரண்டாம்பத்தி | திரும்பும் வழியில் |
| பக்கம் 18 | ,, | ஏஜெண்டான |
| பக்கம் 27 | முதல் பத்தி | பாஞ்சாலங்குறிச்சி நோக்கி |

# எட்டயபுரத்தாரின் சந்திரகிரிவாசம்

**(கி. பி. 803-1347)**

எட்டயபுரம் ஜமீன்தார்களின் ஆரம்ப கால வாழ்க்கை சந்திரகிரியில் தொடங்கியது. எட்டயபுரம் ஜமீன்தார்களில் முன்னோடியும், முதல்வருமாகிய பெரிய அப்பா நாயக்கர் முதல் குமாரமுத்து நாயக்கர் வரை பத்து ஜமீன்தார்கள் ஆந்திராவிலுள்ள சந்திரகிரியில் ஆட்சி புரிந்தார்கள். இந்த பத்து ஜமீன்தார்களின் ஆட்சி காலம் கி. பி. 803 முதல் 1304ம் ஆண்டு வரையாகும். ஏறக்குறைய இவர்கள் எல்லோரும் ஒரே வம்சத்தைச் சேர்ந்தவர்கள். சந்திரகிரியை மேலே குறிப்பிட்ட பத்து ஜமீன்தார்களும் சராசரி ஐம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்கள்.

சந்திரகிரியில் இறுதியாக ஆட்சி செலுத்திய குமாரமுத்து நாயக்கரின் புதல்வர் நல்லம நாயக்கர் என்பவர் தான் 'எட்டப்பன்' என்ற சிறப்புப் பெயர் பெற்றவராகும். இவருக்கு இச் சிறப்புப் பெயர் வரக் காரணமுண்டு. இவர் ஒரு சமயம் தனது படை வீரர்களை அழைத்துக்கொண்டு விஜயநகரம் என்று பெயர் கொண்ட ராயவேலூர் சமஸ்தானத்தின் மன்னர், ஜம்புவைச் சந்திக்கச் சென்றார். அப்பொழுது, கோட்டையின் தெற்கு வாசலில் 'சோமன்' என்ற மாவீரன் தனது சகோதரர்கள் எட்டு மல்லர்களுடன் தன்காலில் தங்கச் சங்கிலியைக் கட்டிக்கொண்டு காவல் புரிந்து

வந்தான். கோட்டைக்குள் செல்பவர்கள் வீரர்களாக இருந்தால் ''தன்னுடன் போரிட்டு வென்று உள்ளே செல்லவேண்டும்'' வீரமற்றவர்கள் சங்கிலிக்கு கீழே குனிந்து கோட்டைக்குள் செல்ல வேண்டுமென்ற நிபந்தனை விதித்தான். நல்லம நாயக்கர் சோமனுடன் போர் செய்து, அவனைக்கொன்று அவனுடைய ஒரு தலையை ஒரு வல்லயத்திலும், அவனுடைய இரத்தத்தில் ஒரு துணியைத் தோய்த்து மற்றொரு வல்லயத்தில் கொடியாகப் பிடித்துக்கொண்டு ஜம்பு மன்னரைச் சந்தித்தார். மன்னர் இவருடைய வீரத்தைப் பாராட்டி சோமவீரனின் தலையைப்போல சொர்ணத்தினால் தலை செய்து இடதுகாலில் விருது கட்டிக் கொள்வதற்கும், சந்திரகாவி கொடியை வெற்றிக் கொடியாக அவருடைய ஜமீனில் பறக்க விடுவதற்கும் ஜம்பு மன்னர் அனுமதி வழங்கினார்.

சோமனை இழந்து அனாதையான சகோதரர்கள் எட்டுமல்லர்களும் வயதில் மிகவும் குறைந்தவர்கள். இதனால் நல்லமநாயக்கர் இந்த எண்மருக்கும்புகலிடம் கொடுத்து, அவர்களுக்கு தந்தையைப் போல ஆதரவு தந்து காப்பாற்றினார். இதனால் தான் இவர் **(எட்டு அப்பன்)** ''எட்டப்பன்'' என்ற சிறப்புப்பட்டத்தைப் பெற்றார். இவர் 1304ம் ஆண்டு முதல் 1347ம் ஆண்டு வரை 43 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

## 2. மதுரை வருகை.

**(1347—1443)**

'எட்டப்பன்' என்ற சிறப்புப் பெயர் கொண்ட நல்லம நாயக்கர் இறந்த பின்பு, அவருடைய புதல்வர் நல்லம எட்டப்பன் ஆட்சிக்கு வந்தார். இவருக்குப் பிறகு, இவருடைய புதல்வர் நல்ல சில்லம எட்டப்ப நாயக்கர் பீடமேறினார். இவர் 1423ம் ஆண்டு வரை சந்திரகிரியில் ஆட்சி புரிந்தார். மேற்கூறிய மூவர் ஆட்சியுடன் சந்திரகிரியில் எட்டப்ப நாயக்கர்களின் ஆட்சி முடிவடைந்தது என்றே கூறலாம்.

கடைசியாக கூறிய எட்டப்ப நாயக்கருக்குப் பின்பு, குமாரமுத்து எட்டப்பன் சந்திரகிரி ஆட்சி பீடமேறினார். ஆனால் இவர் ஆட்சிக்குவந்த காலத்தில்தான் அன்னதேவராயர் ஆட்சி செலுத்தி வந்த விஜயநகர சாம்ராஜ்ஜியத்தின் மீது முகமதியப் பேரரசன் அலாவுதீன் படையெடுத்தார். இந்த படையெடுப்பின் காரணமாக, சந்திரகிரியில்தொடர்ந்து ஆட்சிசெலுத்த முடியாத நிலைமை உருவானது. இதனால் குமாரமுத்து எட்டப்பன் அறுபத்தும் மேற்பட்ட வில் வீரர்கள், ஆயிரம் படைவீரர்கள் மற்றும் இதர பரிவாரங்களுடன் சந்திரகிரியினின்று வெளியேறினார். அவருடன் இம்முடிலிங்கவநாயக்கர், கூளப்ப நாயக்கர், குமாரப்ப நாயக்கர், செங்கோட்டு நாயக்கர், சீலமாதவ நாயக்கர் மாப்பிள்ளை வல்லேறு நாயக்கர், மஞ்சைய நாயக்கர்,

கர்ணம் உலகுடைய பெருமாள் பிள்ளை, பெத்தக்கா வகை அதிகாரி, சாத்துரப்ப தளவாய், காமணன், அவசரம் அய்யம்பெருமாள், பழத்தவசி ஆகியோரும் வந்தார்கள்.

இவ்வாறு தனது படைகளுடன் வெளியேறிய குமாரமுத்து எட்டப்பன் சொல்லொணா இன்னல்களுக்கு உள்ளாகி, இறுதியில் மதுரை வந்தடைந்தார். அலாவுதீன் படையெடுப்பால் அபதியுற்ற இவர்களுக்கு மதுரை மன்னரான அதிவீர பராக்கிரம பாண்டியன் ஆதரவு அளித்தார். இவர்கள் தங்குவதற்கு இடமளித்து திசைகாவல் வேலையில் அமர்த்தினர். அதன்படி மதுரை மேலக் கோட்டை வாசல் முதல் கரடிக்களம் கிராமம் வரையில் திசை காவல் வேலை செய்து வந்தார்கள். இவர்கள் கோட்டை அமைத்து குடியிருக்க கருக்கொட்டான்பட்டி என்ற கிராமத்தை பாண்டிய மன்னர் இவர்களுக்குக் கொடுத்தார். இது தவிர, பின்னாளில் புத்தூர் ஆனையூர் ஆகிய கிராமங்களையும் இவர்களுக்கு பாண்டியன் வழங்கினார்.

இவ்வாறு பாண்டியன் ஆதரவில் வாழ்ந்து வந்த சந்திரகிரியார், பாண்டியர் ஆட்சிக்கு எதிராக கலகம் செய்துவந்த 'மூவரையன் கோட்டையை தாக்கி, வெற்றிபெற்றார்கள். இந்த வெற்றிக்காக இவரைப் பாராட்டி பாண்டிய மன்னர் இவருக்கு சுந்தரபாண்டிய எட்டப்ப நாயக்கர் என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கினர்.

## 3. இளம்புவனத்தில் குடியேற்றம்.

**(1443-1565)**

சந்திரகிரியிலிருந்துவந்த எட்டப்ப வமிசத்தினர் கருக்கொட்டான்பட்டி கிராமத்தில் ஆட்சி புரிந்த காலத்தில், தென்பாண்டி நாட்டில் கங்கைகொண்டானும், மறவர் வாழ்ந்த முதுகுடி நாடு என்ற இளசை நாடும் (இளம்புவனம்) பெரிய பாளையங்களாக திகழ்ந்தன. அப்பொழுது கங்கைகொண்டானை மதுரை மன்னரின் உறவினர் ஜெகவீரபாண்டியன் ஆட்சி புரிந்து வந்தார். ஆனல் முதுகுடி நாடு ஜெகவீரபாண்டியனுக்கு கப்பம் செலுத்த மறுத்தது. இதன் காரணமாக, கங்கைகொண்டானுக்கும் முதுகுடி நாட்டிற்கும் தீராப்பகை வளர்ந்து பல போர்கள் நடைபெற்றன. பல ஆண்டுகள் நடைபெற்ற இந்தப்போரில் ஜெகவீர பாண்டியன் வெற்றிபெற முடியவில்லை. முதுகுடி நாட்டையும் கட்டுப்படுத்த இயலவில்லை. இதன் காரணமாக, ஜெகவீரபாண்டியன் தனக்கு உதவியாக வீரர்களை அனுப்பும் பொருட்டு மதுரை மன்னர் அதிவீர ராமபாண்டியனுக்கு தகவல் கொடுத்தார். இதன்படி, மதுரை பாண்டியனும் தன்னுடைய ஆளுகையின் கீழிருந்த குமாரமுத்து எட்டப்பனையும் அவருடைய போர் வீரர்களையும் உடனடியாக கங்கைகொண்டானுக்கு அனுப்பி வைத்தார்.

### நல்லமநாயக்கனூர் கோட்டை.

கருக்கொட்டான்பட்டியிலிருந்து குமாரமுத்து எட்டப்ப நாயக்கர் தனதுபடை வீரர்களுடன் தெற்கே கங்கைகொண்டானுக்கு புறப்பட்டு வந்தார். வருகின்ற வழியில் சாத்தூருக்கு அருகிலுள்ள நல்லமநாயக்கனூர்

என்ற ஊரில் ஓர் கோட்டை அமைத்து குடியேறினார்கள். இந்தசமயத்தில் இவர்களுக்கு ஏழாயிரம்பண்ணை ஜமீன்தார் வன்னியனார் வேண்டிய உதவிகளை செய்தார். ஏழாயிரம்பண்ணை ஜமீன்தார் எட்டப்ப நாயக்கருக்கும் அவரது படைகளுக்கும் 300 கோட்டை சோளம் வழங்கினார். இதற்கு நன்றியாக, வன்னியனாருக்கு பின்னாளில் எட்டயபுரம் ஜமீன்தார் வருடத்திற்கு 48 கோட்டை நெல்லும், மானியமாக ரூபாய் 250-ம் கொடுத்து வந்தார்கள்.

## முதுகுடிநாடு

கங்கைகொண்டானை ஆட்சி புரிந்த ஜெகவீர பாண்டியனின் படைவீரர்களும், குமாரமுத்து எட்டப்ப நாயக்கரின் போர் வீரர்களும் ஒன்றிணைந்து முதுகுடி நாட்டின் மீது படையெடுத்தார்கள். நீண்ட காலம் நடைபெற்ற இந்த போரில் முதுகுடி நாடு இறுதியாக வீழ்ச்சியுற்றது. முதுகுடி நாட்டிலிருந்த கணக்கற்ற மதிப்புமிக்க பொருள்களை கைப்பற்றினார்கள். மீன் சின்னம் பொறிக்கப்பட்ட பொற்காசுகள், இதர பொருள்கள் எல்லாவற்றையும் சேர்த்து 50 பொதி மாடுகளில் ஏற்றி கங்கைகொண்டானுக்கு எடுத்துச் சென்றார்கள். போர் முடிந்த பின்பு, இளசை நாட்டிலிருந்த அர்ச்சுனத் தலைவன், முத்திருளத் தலைவன் ஆகிய இரு சகோதரர்களும் தொடர்ந்து சேவை செய்வதாக எட்டப்ப வமிசத்தினருக்கு செப்புத்தகட்டில் சாஸனம் எழுதிக்கொடுத்தார்கள்.

இவ்வாறு இளசை நாட்டை போரில் வெல்ல தனக்கு உதவி புரிந்த குமாரமுத்து எட்டப்ப நாயக்கருக்கு இளசை, வாலம்பட்டி, ஈரால், நடுவிற்பட்டி சுரைக்காய்பட்டி, பாண்டவர்மங்கலம், ராமநாத்து, பித்தராஜபுரம் என்ற பிதப்புரம் ஆகிய எட்டு கிராமங்களையும் அன்பளிப்பாக கங்கைகொண்டான் பாண்டிய மன்னர் கொடுத்தார். இந்த கிராமங்களிலிருந்து ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 20,000 வருமானம்



வந்தது. மேலும் இளசை நாட்டில் கோட்டைகட்டி குடியிருக்கவும் அனுமதி அளிக்கப்பட்டது. வெற்றிக்கு அடிகோலிய குமாரமுத்துவுக்கு "ஜெகவீர ராமன்" என்ற சிறப்பு பட்டத்தையும் அளித்தார். இதன் பின்பு இளசை நாட்டில் எட்டப்ப வமிசாவழியினர் ஆட்சி புரியத் தொடங்கினார்கள். குமாரமுத்து இளசை நாட்டிலும், நல்லமநாயக்கனூர் கோட்டையிலும் வாழ்ந்து காலமானார். இவர் 1423 முதல் 1443 வரை இளசை நாட்டில் ஆட்சி புரிந்தார்.

இவருக்குப் பின்பு இவருடைய மூத்த மகன் குமார எட்டப்பன் பதவிக்கு வந்தார். இளம்புவனத்திலிருந்து திருச்சுழி சீமை வரை கங்கைகொண்டான் பாண்டிய மன்னருக்கு திசைகாவலராக இருந்தார். குமார எட்டப்பன் 1472ம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார். இதன் பின்பு, சுந்தரபாண்டிய எட்டப்பன், கெச்சில எட்டப்பன், வெங்கடேஸ்வர எட்டப்பன், ஜெகவீரகெச்சில எட்டப்பன் ஆகிய நால்வரும் 1472ம் ஆண்டு முதல் 1565ம் ஆண்டு வரை சுமார் 93 ஆண்டுகள் இளசை நாட்டில் ஆட்சி புரிந்தார்கள். இவர்களுடைய ஆட்சி காலத்தில் இளசை நாட்டிற்கு அருகிலிருந்த அருங்குளம், சிந்தய நாயக்கன்பட்டி, மாவிலோடை ஆகிய மறவர் வாழ்ந்த பாளையங்கள் மீது படையெடுத்து இளசை நாட்டுடன் சேர்த்துக்கொண்டார்கள். இது தவிர, சாயமாலை அதைச் சுற்றியுள்ள 15 கிராமங்களையும் தங்களுடைய ஆட்சிக்குள் கொண்டு வந்தார்கள். இவ்வாறு இளசையில் காலூன்றிய சந்திரகிரியார் கால வெள்ளத்தில் இந்த பகுதியில் பெரும்பான்மையான கிராமங்களை தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

# 4. எட்டயபுரம் நகர் உதயம்.

**(1565-1638)**

ஜெகவீர கெச்சிலப்ப எட்டப்ப நாயக்கரின் ஆட்சியுடன் முதுகுடி நாட்டின் (இளசை நாட்டின்) ஆட்சி முடிவடைந்தது. இதற்கு பின்பு, இவரது குமாரர் ஜெகவீர குமார எட்டப்ப நாயக்கர் பதவியேற்ருர். இவர் பதவிக்கு வந்து இரண்டாவது ஆண்டில், 1567ம் ஆண்டு ஜனவரி மாதம் இளம்புவனத்திற்கு கிழக்கே (அதாவது இளசை நாட்டிற்கு கிழக்கே) மூன்று மைல் தூரத்தில் உன்னதமான ஓர் மேட்டுப் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து, சிவ பிரதிஷ்டை செய்து தனது படைகளுடன் குடியேறினர். பின்னளில் கோட்டை கட்டி குடியேறிய இந்த இடத்திற்கு தனது முன்னேர்களின் சிறப்புப் பெயரால் ''எட்டயபுரம்'' என்று பெயரிட்டு அழைத்தார்.

எட்டயபுரம் நகர் தோன்றி சில ஆண்டுகள் கழித்து மதுரையை ஆண்ட குமார கிருஷ்ணப்ப நாயக்கர், திருவிதாங்கூர் நாட்டிற்கு சொந்தமான இரணியல் கோட்டை மீது போர் தொடுத்தார். இந்தப் போரில் மதுரை நாயக்க மன்னருக்கு உதவும் பொருட்டு குமார எட்டப்பன், தனது படைத் தளபதி பெத்தண்ணன் தளவாய், சிதம்பரநாத பிள்ளை மற்றும் பெரும் படையுடன் இரணியல் புறப்பட்டுச் சென்ருர்கள். போரில் ஈடுபட்டு எட்டயபுரம் திரும்பும் ஊத்துமலைக் காட்டில் தனது படைவீரர்களுடன் குமார எட்டப்பன் தங்கினர். அவ்வமயம் மறைந்திருந்த எதிரி வீரன் ஒருவனுல் அம்பு எய்தப்பட்டு அந்த இடத்திலேயே இறந்து போனுர். இந்த ஜமீன்தாரின் திடீர் மரணச் செய்தி



யைக் கேள்வியுற்ற மதுரை மன்னர் முத்துக்ருஷ்ணப்ப நாயக்கர் தன்பொருட்டு உயிர் நீத்த எட்டப்ப ஜமீன்தாருக்கு கழுகுமலை கிராமத்தை 'இரத்த மானியமாக' அளித்தார். அத்துடன் ''ஐயன்'' என்ற சிறப்புப் பட்டத்தையும் சூட்டினர். இவ்வாறு எட்டயபுரம் நகரைத் தோற்றுவித்த இவர் 19 ஆண்டுகள் ஆட்சி புரிந்து காலமானர்.

## இடவன் கை எட்டப்பன்.

எட்டயபுரத்தை நிறுவிய ஜமீன்தார் காலமான தற்குப் பின்னர், அவருடைய மகன் பட்டமேற்று பதினறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இதற்குப்பின்பு, 1595ம் ஆண்டு ஜெகவீரராம எட்டப்பநாயக்கர் ஐயன் ஆட்சிக்கு வந்தார். இவர்காலத்தில் மதுரையை முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சி புரிந்து வந்தார். ஒரு சமயம் மதுரை நாயக்கர் மன்னர் திருவிதாங்கூரில் வரி வசூல் செய்யச் சென்றபோது. இந்த எட்டயபுரம் ஜமீன்தாரும் உடன் சென்ருர். அவ்வமயம் திருவிதாங்கூரை ஆட்சி புரிந்த வெஞ்சி மார்த்தாண்டாராஜா இவர்களை வரவேற்று, ''தோப்பா'' பணம் என்ற வரிப் பணத்தை கொடுத்தார். இவருக்குப் பின்பு, இவருடைய புதல்வரான ''இடவன்கை'' கெச்சிலப்ப நாயக்கர் 1615ல் அரியாசனம் ஏறினர். இவர் புகழ் மிக்க வீரராகும். வீரதீரமிக்க செயல்களைப் புரிவதில் மிகச் சிறந்த திறமைசாலி. இவருக்கு ''இடவன்கை'' என்ற பட்டப்பெயர் வந்ததற்கே அவருடைய வீரச் செயலே காரணமாகும்.

இவர் கோலார்பட்டி கிராமத்திற்கு அருகே நச்முஞ்சி என்ற குக்கிராமத்திற்கு மான் வேட்டையாடச் சென்றார். அதுபோது கோலார்பட்டி மக்களுடன் எல்லைத்தாவா ஏற்பட்டு, அது சண்டையாக முற்றியது. இந்தச் சண்டையில், கெச்சிலப்ப நாயக்கர் எதிரி குதிரையையும், குதிரை மீதிருந்த எதிரி வீரனையும் தனது இடதுகையிலுள்ள வாளால் ஒரே வெட்டில் வெட்டிச் சாய்த்ததால், இவருக்கு "இடவன்கை" கெச்சிலப்ப நாயக்கர் என்ற பெயர் வந்தது.

இதற்குப்பின்பு நம்பிபுரத்தில் இவருக்கும் சேதுபதிக்கும் பெரும் போர் நடந்தது. இந்தப்போரில் சேதுபதியின் குதிரைகளான நட்டுவராயன், பெண்டுகநாச்சி ஆகியவற்றைக் கைப்பற்றினார். சேதுபதி படைவீரர்கள் பெருநாழி கிராமம் வரை பின்வாங்கிச் சென்றார்கள். "இடவன்கை" எட்டப்ப நாயக்கரின் இரண்டாவது மனைவியின் மூத்த குமாரர் ரணசூர கெச்சிலப்ப நாயக்கரும் மதுரை மன்னர் முத்து வீரப்ப நாயக்கரும் மிக நெருங்கிய நண்பர்கள். ரணசூர கெச்சிலப்ப நாயக்கர் வேண்டிக்கொண்டதன் போரில், மதுரை மன்னர் இவருக்கு குருமலையை ஒட்டிய சில கிராமங்களை வழங்கினார். இதன் மூலம் குருமலை ஜமீன் உதயமாகியது.

## 5. மாதாகோவிலுக்கு மன்னர் பாதுகாப்பு.

**(1638-1725)**

"இடவன்கை" கெச்சிலப்ப நாயக்கர் குமாரர் ஜெகவீரராம எட்டப்ப நாயக்கர் ஐயன் 1638ம் ஆண்டு ஜமீன் பொறுப்பேற்றார். இவர் இருபத்தொன்று ஆண்டுகள் ஆட்சி புரிந்து காலமானார். இதற்குப் பின்பு, 1659ம் ஆண்டு ஜெகவீரராம கெச்சிலப்ப எட்டப்ப நாயக்கர் ஐயன் எட்டயபுரம் ஜமீன்தாரானார்.

இவர் காலத்தில்தான் காமநாயக்கன்பட்டி என்ற சிற்றூரில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு 1690ம் ஆண்டு (தமிழாண்டு 865 சித்திரை மாதம் 19ந் தேதி) மாதாகோவில் கட்டப்பட்டது. இம்மாதா கோவிலை முழுமையான அளவில் பாதுகாப்பளிப்பதற்கு எட்டயபுரம் ஜமீன்தார்கள் பரம்பரை பரம்பரையாக பொறுப்பு எடுத்துக் கொண்டார்கள் என்பதை ஓர் பிரகடனத்தின் மூலம் அறிய வருகிறோம். 1683—1685ம் ஆண்டுகளுக்கிடையே இந்த மாதாகோவில் ஜான்-டி-பிரிட்டோ என்ற அருளானந்த சாமியாரால் அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆண்டு தோறும் மாதா கோவிலில் நடைபெறும் திருவிழாக்களில் எட்டயபுரம் ஜமீன்தாரர்கள் கலந்துகொண்டு சிறப்பிப்பது நீண்ட கால வழக்கமாகும்.

### தளபதி அழகுமுத்து சேர்வை.

இந்தஜமீன்தார் காலத்தில்தான். 1663ம் ஆண்டு (தமிழ் ஆண்டு 838) அழகப்ப சேர்வைகாரர் தன் உறவினர் பத்து வீட்டாருடனும் பரிவாரம் இருபது வீட்டுக்காரருடனும் மதுரையிலிருந்து எட்டயபுரம்

வந்து சேர்ந்தார். அந்நாளில் எட்டயபுரம் ஜமீன்தாரிடம் போர் சேவகம் வேலை கோரினார்கள். கோரிக்கையை ஏற்றுக்கொண்ட எட்டயபுரம் ஜமீன்தார் அழகப்ப சேர்வைகாரரை படை வீரர்களின் ஒரு பகுதிக்கு தளபதியாக நியமித்தார். இதுமட்டுமல்லாமல் இவரும் இவருடைய போர் வீரர்களும் குடியேற கட்டாலங்குளம், அதையடுத்த சில கிராமங்களையும் ஜமீன்தார் வழங்கினார். மேலும் அழகப்ப சேர்வைகாரருக்கு சம்பளத்திற்காக 500 பொன் வருமானமுள்ள சோழபுரம், வாலம்பட்டி, மார்த்தாண்டன்பட்டி ஆகிய கிராமங்கள் கொடுக்கப்பட்டன.

காமநாயக்கன்பட்டி மாதாகோவிலுக்கு பாதுகாப்பளித்தவரும் போர் வீரர்களை வரவேற்று அவர்களுக்கு வேலை கொடுத்து உதவியும் வந்த இந்த ஜமீன்தார் 32 ஆண்டுகள் ஆட்சி புரிந்து 1691ல் காலமானார்.

**சூரங்குடிப் போர்:**

இவருக்குப் பின்பு, இவரது புதல்வரான ஜெகவீரராம கெச்சிலப்ப எட்டப்ப நாயக்கர் ஐயன் 1691ல் ஜமீன்தாராக பொறுப்பேற்றார். இவருக்கு சூரங்குடியில் எதிரிகள் இருந்தார்கள். அவர்களை அடக்குவதற்காக குமாரெட்டு என்ற அதிகாரியையும் கட்டாலங்குளம் அழகப்பன் சேர்வை உறவினரான கெச்சிலண்ணன் சேர்வையையும் இன்னும் சில போர் வீரர்களையும் ஜமீன்தார் அனுப்பினார். இவர்கள் சூரங்குடி சென்று கோட்டை வாசலில் எதிரி வீரர்களை முறியடித்து கோட்டைக்குள் நுழையும்போது எதிரிவீரன் சுட்டுவிட்டதால் கெச்சிலண்ணன் சேர்வை இறந்துவிட்டார். இதைக் கண்ணுற்ற ஜமீன் அதிகாரி குமாரெட்டு கெச்சிலண்ணன் உடலை எட்டயபுரத்திற்கு அனுப்பிவிட்டு, மறுபடியும் தொடர்ந்து போர் செய்து தன் படை வீரர்களுடன் கோட்டையைக் கைப்பற்றினார்.



கெச்சிலண்ணன் சேர்வை மரணத்தைக்கேள்வியுற்ற ஜமீன்தார் கெச்சிலண்ணன் சேர்வைக்கு சந்ததி இல்லாத காரணத்தினால் அவர் சகோதரி சின்னக்காள் மகன் அழகுமுத்து சேர்வைக்கு குருவிநத்தம், தீத்தாம்பட்டி ஆகிய கிராமங்களையும் இரத்த மானியமாக வழங்கினார். ஏற்கனவே மானியமாக வழங்கப்பட்டிருந்த வாலம்பட்டி, மார்த்தாண்டன்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் வரி விலக்களித்தார். மேலும் இதோடு கட்டாலங்குளத்தைச் சேர்ந்த சில கிராமங்களையும் பின்னாளில் ஜமீன்தார் சேர்வை குடும்பத்திற்கு அளித்தார்.

இந்த ஜமீன்தார் காலத்தில்கடுமையான பஞ்சம் தலைவிரித்தாடியது. பஞ்சத்தினால் மதுரை மன்னருக்கு இவரால் வரி செலுத்த முடியவில்லை. இதன் காரணமாக இராமநாதபுரம் ஜமீனைச் சேர்ந்த தேடாச் சல்லியில் சிறிது காலம் தலைமறைவு வாழ்க்கை நடத்தினார். இவர் எட்டயபுரத்தினின்று வெளியேறிய செய்தி அறிந்து, இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு கொல்லபட்டி ஜமீன்தார் மதுரை அரசருக்கு ஆதரவாகஇருந்த அதிகாரி வெண்ணைப்பிள்ளை, என்பவரையும் இன்னும் பல போர் வீரர்களையும் சேர்த்துக்கொண்டு எட்டயபுரத்தைக் கைப்பற்ற வந்தார். ஆனால், இந்தச்செய்தி தேடாச்சல்லி கிராமத்தில் தலைமறைவாக தங்கிஇருந்த எட்டயபுரம் ஜமீன்தாருக்கு எட்டியது. அவர் உடனே அபிஷேகம் பிள்ளை, மஞ்சைய நாயக்கர் ஆகியோர் தலைமையில் பெரும் போர் வீரர்களை திரட்டிக்கொண்டு இரவோடு இரவாக எட்டயபுரம் புறப்பட்டு வந்தார். இதையறிந்த இராமநாத்துவீரர்கள் கிழக்குக் கோட்டை வாயிலைத் திறந்தார்கள். இதன் வழியாக, எட்டயபுரம் ஜமீன்தார் உள்ளே நுழைய, கொல்லபட்டி ஜமீன்தார் தனது போர் வீரர்களை அழைத்துக்கொண்டு மேலக் கோட்டை வழியாக வெளியேறி சென்று விட்டார். வெண்ணைப் பிள்ளை எட்டயபுரம் ஜமீன்தாராலும், போர் வீரர்களாலும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு மறுபடியும் கொல்லபட்டிக்கு அனுப்பப்பட்டார். இந்த

செய்தி அவ்வமயம் மதுரை மன்னரிடம் வேலைபார்த்து வந்த குழந்தைவேலு பிள்ளைக்கு எட்டியது. தன்னுடைய உறவினரான வெண்ணைப் பிள்ளைக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு பழிவாங்கும் பொருட்டு, மதுரை மன்னருக்கு எட்டயபுரம்ஜமீன்தார்செலுத்தவேண்டிய 5000 பொன்னை 10000 (ரூ. 17500) பொன்னாக உயர்த்தி உத்திரவிட்டார். அதன்படியே எட்டயபுரம் ஜமீன்தாரும் செலுத்தி வந்தார். இந்தச் செயல்மதுரை அரசருக்கு தெரிந்தவுடன் குழந்தைவேலுப் பிள்ளையை பதவி நீக்கம் செய்து விட்டார். எக்கதியுமின்றி தவித்த நிலையில், குழந்தைவேலு பிள்ளை மீண்டும் எட்டயபுரம் வந்துகாத்திருந்தார். தன்னுடைய தவறைஉணர்ந்து கொண்டதால், எட்டயபுரம் ஜமீன்தாரின் சிபாரிசுபடி இவர் மன்னிக்கப்பட்டு மதுரை மன்னரால் மறுபடியும் வேலைக்கு அமர்த்தப்பட்டார். இந்த ஜமீன்தார் 14 ஆண்டுகள் ஆட்சி புரிந்து 1705ம் ஆண்டில் காலமானார்.

**வாலை வாருதியை வாகை சூடிய உமறு.**

சூரங்குடிப் போரில் வெற்றி பெற்ற எட்டயபுரம் ஜமீன்தாரின் குமாரர் ஜெகவீரராம வெங்கடேஸ்வர எட்டப்ப நாயக்கர் 1705-ல் ஜமீன் நிர்வாகத்தை ஏற்றார். இவர் சிறந்த விஷ்ணு பக்தர். இதன் காரணமாகத்தான், 1710ம் ஆண்டில் எட்டயபுரத்தில் ஓர் விஷ்ணு ஆலயத்தை நிர்மாணித்தார்.

இவர் காலத்தில் புகழ்பெற்ற கவிஞர் கடிகை முத்துப்புலவர் அரசவைப் புலவராக இருந்தார். இவர் ஜமீன்தார் மீது சமுத்திரவிலாசம், காமரச மஞ்சரி ஆகிய இரு பிரபந்தங்களை இயற்றினார். இவ்விரண்டு பிரபந்தங்களும் சிலேடை, எமகம் முதலிய அம்சங்கள் கொண்டவையாகத் திகழ்ந்தன. கடிகைமுத்துப் புலவரின் மாணாக்கராக உமறுப்புலவர் இருந்தார். உமறுப் புலவர் வடநாட்டுக் கவிஞரான வாலை வாருதி என்பவரை அரசவையில் நடைபெற்ற சொற்போரில் வென்று எட்டயபுரம் ஜமீன்தாருக்கும், தனது ஆசான் கடிகை முத்துப் புலவருக்கும் பெருமை தேடித்தந்தார். உமறுப் புலவர் நபிநாயக அடிகளாரின் வரலாற்றை இனிய தமிழில் ''சீறாப்புராணம்'' என்ற காவியத்தில் வடித்துள்ளார். இது சொற்சுவை, பொருட்சுவை நிறைந்தது



இந்த ஜமீன்தார் அனுமந்த கோட்டையில் நடைபெற்ற போரில் இராமநாதபுரம் சேதுபதிக்கு உதவிபுரிய பெரியமுத்துப் பிள்ளை கட்டாலங்குளம் அழகுமுத்து சேர்வை ஆகியோர் தலைமையில் 500 போர் வீரர்களை அனுப்பி வைத்தார். இந்தப் போரில் அழகுமுத்து சேர்வையும் முத்துப்பிள்ளையும் மரணம் அடைந்தார்கள். பெரியமுத்துப் பிள்ளை போரில் மரணமடைந்ததைமுன்னிட்டு அவருடையகுமாரர் குழந்தைவேலுப் பிள்ளைக்கு எட்டயபுரம் ஜமீனில் உயர் பதவி அளிக்கப்பட்டது இந்த ஜமீன்தார் 1725ம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார்.



# 6. பாஞ்சாலங்குறிச்சி எழுச்சியும் ஆதனூர் வீழ்ச்சியும்

**(1725-1739)**

உமறுப் புலவரை ஆதரித்த ஜமீன்தாருக்குப் பின்பு, 1725ம் ஆண்டு ஜெகவீரராம எட்டப்ப நாயக்கர் அய்யன் ஜமீன்தார் பதவிக்கு வந்தார். இவர் பதவிக்கு வந்தகாலத்தில் மதுரையை விசுவநாத நாயக்கர் ஆட்சி புரிந்து வந்தார். பாண்டிய மன்னர்களில் கடைசி அரசரான சந்திரசேகர பாண்டியனின் புதல்வர்களான ஐவர் மதுரை நாயக்கர் ஆட்சியை ஏற்றுக் கொள்ளாமல், திருநெல்வேலி மாவட்டத்தில் கயத்தாறு கங்கைகொண்டான், சீவலப்பேரி ஆகிய பகுதிகளை ஆட்சி புரிந்து வந்தார்கள். இவர்கள் ''இளம் பஞ்ச பாண்டவர்கள்'' எனச் சிறப்பித்து அழைக்கப்பட்டார்கள். இந்த ''இளம் பஞ்ச பாண்டவர்கள்'' மதுரையை ஆட்சி புரிந்த விசுவநாத நாயக்கரை கடுமையாக எதிர்த்து வந்தார்கள். இவர்களை அடக்கும் பொருட்டு மதுரை நாயக்க மன்னர் தனது அமைச்சர் அரியநாயக முதலியாரை எட்டயபுரத்திற்கனுப்பினார். அவருடன் எட்டயபுரம் ஜமீன் படைகளும் சேர்ந்து இளம் பஞ்ச பாண்டவ பாண்டிய மன்னர்களுடன் போரிட்டு, அவர்களை முறியடித்தார்கள். இந்தப் போரில் ''இளம் பஞ்ச பாண்டவர்களில்'' மூத்தவரான ஜெகவீர ராம பாண்டியனும், படைத் தளபதி தளவாய் பாண்டியனும் வீர மரணம் எய்தினார்கள்.

இதன் பின்பு, ஐவரின் சந்ததியாரு[illegible] மதுரை நாயக்க மன்னர் கருணை கொண்டு மீண்[illegible]



கயத்தாறு, கங்கைகொண்டான், சீலவலப்பேரிமற்றும் சில இடங்களை வழங்கி ஆட்சிபுரியச் சொன்னார். ஆனால் நீண்ட காலம் கழித்து இவர்கள் ஆட்சிபுரிய வலிமை இழந்த காரணத்தினால், இவர்களிடம் திசை காவல் வேலைபுரிந்து வந்த கட்டபொம்மு நாயக்கரிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைத்தார்கள். இளம் பஞ்ச பாண்டவர்களின் நாட்டினால், அதற்கு கட்டபொம்மு பாஞ்சாலங்குறிச்சி எனப் பெயரிட்டார். மேலும் இளம் பஞ்ச பாண்டவர்களின் மூத்தவர் பெயரான ஜெயவீர ராம பாண்டியன் பெயரால், பஞ்சாலங்குறிச்சியின் தலை நகருக்கு ஜெகவீரபாண்டியாபுரம் எனப் பெயரிட்டு அழைத்தார்.

இதே காலத்தில் பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகிலிருந்த ஆதனூர் ஜமீனை குப்பா நாயக்கர் ஆட்சி புரிந்து வந்தார். இந்த ஆதனூரை பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மு தாக்கினார். இந்த திடீர் தாக்குதலை சமாளிக்க முடியாத நிலையில், ஆதனூர் ஜமீன்தார் குப்பா நாயக்கர் எட்டயபுரம் ஜமீன்தாரின் உதவியை நாடினார். எட்டயபுரம் ஜமீன்தார் சீனியா பிள்ளை தலைமையில் போர் வீரர்களை ஆதனூர் ஜமீன்தாருக்கு உதவி புரிய அனுப்பினார். ஆனால் எட்டயபுரம் படை ஆதனூர் செல்வதற்குள் பாஞ்சாலங்குறிச்சியார் ஆதனூரைக் கைப்பற்றிக்கொண்டார்கள். இந்தப் போரில் குப்பா நாயக்கர் மரணம் அடைந்தார்.



# 7. கும்பினியை எதிர்த்த எட்டயபுரம்

**(1739-1783)**

ஆதனூர் ஜமீன் வீழ்ச்சியாலும், பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் படைபெருக்கத்தாலும் எட்டயபுரம் ஜமீன்தார் தீராக் கவலை கொண்டார். இக்கால கட்டத்தில் தான் வெண்கலக்கடையில் யானை புகுந்தது போல் கும்பினி தளபதி கான்சாகிப்பின் படை வைத்தியலிங்கம் என்பவரின் தலைமையின் கீழ் எட்டயபுரத்தின் [illegible] வந்தது. கான்சாகிப் படையினர் எட்டயபுரத்திலிருந்த சிவன், விஷ்ணு ஆலயங்களை தகர்த்தெறிந்தனர். எட்டயபுரம் கோட்டைக்கு கீழ் திசையில் இருந்த பூஜை மண்டபத்தையும் அழித்தார்கள்.

தெற்கே பாஞ்சாலங்குறிச்சியின் அச்சுறுத்தல், மேற்கே கான்சாகிப்பின் படையெடுப்பு ஆகிய இரண்டையும் எட்டபுரம் ஜமீன்தாரால் சமாளிக்க முடியவில்லை. இதனால், எட்டயபுரத்தை விட்டு தனது காரியதரிசிகளான அலங்காரய பிள்ளை முத்தையா பிள்ளை மற்றும் சில போர் வீரர்களுடன் எட்டயபுரம் ஜமீன்தார் கிழக்கே பெருநாழி கிரமத்திற்கு சென்று விட்டார். பெருநாழியில் இவர்கள் வாசம் புரிந்தார்கள் எட்டயபுரத்தைக் கைப்பற்றிய கான்சாகிப் தனது ராஜண்டான பூதலப்புரம் எட்டய்யா என்பவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார்.

## குருமலைத்துரை வருகை.

இதற்கிடையே, பெருநாழி சென்ற எட்டயபுரம் ஜமீன்தாரின் உறவினரும், குருமலை பாளையக்காரருமான குருமலைத்துரை எட்டயபுரம் ஜமீனையும் தனது



ஆளுகையின் கீழ்கொண்டுவர எண்ணம் கொண்டார். தனது எண்ணத்தை கான்சாகிபிடம் நேரில் சொல்லத் துணியாத குருமலைத்துரை கான்சாகிபின் நண்பரான வேம்பத்தூர் சிவசங்கரன் பிள்ளையின் உதவியை நாடினார். சிவசங்கரன் பிள்ளையின் சிபாரிசை ஏற்றுக் கொண்ட கான்சாகிப் எட்டயபுரத்தைக் குருமலைத் துரையிடம் ஒப்படைத்து தனது சிவசங்கரன் பிள்ளையை எட்டயபுரத்தில் தன்னுடைய பிரதிநிதியாக கான் சாகிப் நியமித்தார். கான்சாகிபிடமிருந்து எட்டயபுரம் ஜமீன் ஆட்சிப் பொறுப்பேற்ற குருமலைத்துரை தனது பாளையமான குருமலையை விட்டு எட்டயபுரத்தில் குடியேறினார். இந்தச் செய்தி பெருநாழியில் தங்கியிருந்த எட்டயபுரம் ஜமீன்தாருக்கு எட்டியது. ஆயினும், கான் சாகிபின் படை பலத்தை துணையாகக் கொண்டு ஆட்சி புரியும் குருமலைத்துரையை அவரால் எதிர்க்க முடியவில்லை. இதே கவலையில் பெருநாழி கிராமத்தில் எட்டயபுரம் ஜமீன்தார் உயிர் நீத்தார்.

## இராமநாத்துக் கோட்டையில் போர்

பெருநாழியில் உயிர்நீத்த ஜமீன்தாருக்கு எஞ்சியதெல்லாம் அவருடைய புதல்வன் வெங்கடேஸ்வர எட்டப்பன் ஒருவரே. உற்ற நாட்டையும், பெற்றதகப்பனையும் பறிகொடுத்த இவர் கும்பினியையும். அதனுடைய ஏஜெண்டுகளையும் எதிர்த்து அறப்போர் புரியத் தொடங்கினார். இவரின் மாமனாரான வல்லேறு நாயக்கர் குருமலைத்துரைக்கு ஆதரவாகவே இருந்தார். இந்நிலையில், இவருடைய தந்தை எட்டயபுரத்தை விட்டு பெருநாழிக்கு வந்தபோது அவருடன்வந்த காரியதரிசிகளும், தளபதி அழகுமுத்து சேர்வைகாரரும் உற்ற நண்பர்களான இருந்தார்கள். இழந்த எட்டயபுரம் ஜமீனைமீட்பதற்காக இவர் கிராமங்கள் தோறும்சென்று போர் வீரர்களை திரட்டினார். எட்டயபுரத்தை மீட்கும் இவரின் முயற்சிக்கும், செயலுக்கும் கிராமமக்கள் ஆதரவு நல்கினார்கள். குறிப்பாக பெருநாழி, மாவிலோடை, அருங்குளம், செமப்புதூர். கட்டாலங்குளம்

எழுபட்டி, சித்தவநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்கள் இரைதுப்போர் பாசறைகளாகத் திகழ்ந்தன. இவ்வாறு போர் வீரர்களை திரட்டிய இவர் எட்டயபுரத்தை மீட்டும் பணியில் ஈடுபட்டார். முதன் முதலில் எட்டய புரத்திற்கு அருகிலுள்ள இராமநூத்துகிராமத்தில் தனது படையுடன் முகாமிட்டார். ஆனால். இவர் முகாமிட்டி ருந்த செய்தியை அறிந்த கான்சாகிபின் காரியதரிசி சிவசங்கரன் பிள்ளை ஒரு படையுடன் இராமநூத்து விரைந்தார். எதிர்பாராத விதத்தில், தாக்குதல் கொடுத் ததால், இந்தப்போரில் எட்டப்ப ஜமீன்தார் தோல்வி அடைந்தார். இராமநூத்துப் போரில் பங்கு கொண்ட எட்டயபுரம் ஜமீன்தாரின் படை பலத்தைக் கண்டு சிவசங்கரன் பிள்ளையும், குருமலைத்துரையும் அச்சம் கொண்டார்கள். இதனால் பெருநாழியில் தங்கியிருந்த ஜமீன்தாரையும், அவரின் படை பரிவாரங்களையும் தாக்கி நிர்மூலமாக்கத் திட்டமிட்டார்கள். இதன்படி, படை உதவி கோரி சிவசங்கரன் பிள்ளை கான்சாகிபை சந்திக்க மதுரை சென்றார்.

**பெத்தாநாயக்கனூர் கோட்டையில் போர் முழக்கம்:**

முதல் முறையாக நடைபெற்ற போரில் தோல்வியைத் தழுவிய எட்டப்பர் அஞ்சவில்லை. மீண்டும் கிராமங்களுக்குச் சென்று தனக்கு ஆதரவாக போர் வீரர்களைத் திரட்டினார். மாவிலோடையை தனது போர்க்களமாக வைத்துக் கொள்ளத் திட்டமிட்டு போர் வீரர்களை மாவிலோடைக்கு வர ஏற்பாடு செய்தார். அதன்படி, பெருநாழியில் வாழ்ந்த எட்டயபுரம் ஜமீன்தாருக்கு ஆதரவாக செயலாற்றிய போர் வீரர்கள் மாவிலோடை செல்ல தயாரானார்கள். மாவிலோடைக்கு வரும் வழியில் போர் வீரர்கள் எல்லோரும் பெத்தா நாயக்கனூர்கோட்டையில் இரவுநேரத்தில் ஓய்வெடுத்தார்கள். அதிகாலையில் இவர்களை எல்லாம் ஒன்றிணைத்து மாவிலோடை அழைத்துச் செல்ல அழகுமுத்துச்சேர்வை மற்றும் படைத்தளபதிகள் திட்டமிட்டிருந்தார்கள். வெண்ணை திரண்டு வரும்போது [illegible] உடைந்தாற்போன்று, வலுவான குதிரைப்படைக



டனும், எண்ணற்ற போர் வீரர்களுடனும் பெத்தா நாயக்கனூர் கோட்டை கான்சாகிபால் முற்றுகையிடப் பட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் கோட்டைக்குள்ளி ருந்த எட்டப்பரின் போர் வீரர்கள் தாங்கள் கான்சாகி பின் குதிரைப்படையால் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார்கள். கோட்டைக்குள் தங்கிய வீரர்கள் வெளியே செல்ல முடியாமலும், உள்ளே நிம்மதியாக இருக்க முடியமலும் திணறினார்கள்.

இந்த நேரத்தில் கான்சாகிபின் பெரும்படை கோட்டைக்குள் புகுந்து தாக்குதலைத் தொடங்கியது. காலம் கடந்து விட்டதை எண்ணிய தளபதி அழகு முத்துச்சேர்வை கோட்டைக்குள் புகுந்த கான்சாகிப் படையை எதிர்த்துப்போரிடும்படி தனது படை வீரர்களுக்கு கட்டளையிட்டார். பெத்தாநாயக்கனூர் கோட் டைக்குள் பெரும்போர் மூண்டது. கான்சாகிப் படை எட்டப்பரின் படையை சின்னா பின்னப் படுத்தியது. கணக்கற்ற போர் வீரர்கள் மாண்டனர். கோட்டை எங்கும் குருதி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. இறுதியில், தளபதி அழகுமுத்து சேர்வை உள்பட 256 வீரர்களை கான்சாகிப் கைது செய்தார். கான்சாகிப்பை எதிர்த்து போரிட்டதால், கைது செய்யப்பட்டவர்களில் 249 போர் வீரர்களின் வலக்கைகள் மட்டும் துண்டாடப்பட்டன. வெட்டுண்ட வீரர்கள் வீதியிலே தூக்கி எறியப்பட்டார்கள். இத்துடன் மட்டும் கான்சாகிப்பின் போர் வெறி தணியவில்லை. தளபதி அழகுமுத்து சேர்வை, கெச்சிலணன் சேர்வை, வெங்கடேஸ்வரெட்டு சேர்வை, முத்தழகு சேர்வை, பரிவாரம் முத்திருளன், லக்ஷ்மணன், தலைக்காட்டுபுரம் மயிலு பிள்ளை ஆகிய ஏழு தளபதிகளையும் கைது செய்து நடுக்காட்டு சீமை என்ற இடத்திற்கு கொண்டு சென்றார்கள். அங்கே அவர்களை சித்திரவதை செய்து 'எங்கே எட்டப்பன்' எனக் கேட்டார்கள். ஆனால், அவ்வீரர்களோ மாவிலோடையில் போர் பாசறையில் தங்கியிருந்த எட்டப்பரைக் காட்டிக் கொடுக்க மறுத்து விட்டார்கள். இந்தச் செயலுக்காக, ஏழு தளபதிகளையும்

நடுக்காட்டுச் சீமையில் ஒரு மேட்டுப் பகுதிக்கு
அழைத்துச் சென்று கைகளை பின்னால்கட்டி, நிராயுத
பாணிகளாக நிறுத்தப்பட்டு கான்சாகிப்பின் பீரங்கியால்
சுடப்பட்டார்கள்.

இதற்கிடையில். பெத்தா நாயக்கனூர்கோட்டை
போரின்போது, காமணன் சேர்வை. ராமநாத பிள்ளை
ஆகிய இருவீரர்களும் கோட்டையில் கழிவுநீர்செல்லும்
கால்வாய் துவாரத்தின் வழியாக நுழைந்து வெளியேறி
மாவிலோடை நோக்கி ஓடிவிட்டார்கள். இவ்விருவரின்
மூலமாக, பெத்தா நாயக்கனூர் கோட்டை ரத்த வெள்
ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட செய்தியை எட்டப்பர் அறிந்
தார் தன்னுடைய தளபதிகளையும், போர்வீரர்களையும்
பறிகொடுத்த ஜமீன்தார் புழுவாகத் துடித்தார். அள
வற்ற சோகத்தோடு பெருநாழி திரும்பிச் சென்றார்.
இத்துடன் இரண்டாம் முறையாக எட்டயபுரத்தை
மீட்பதில் தோல்வி கண்டார்கள்.

**எட்டயபுரம் ஜமீன் விடுதலை.**

பெத்தா நாயக்கனூர் கோட்டையில் வெற்றி
பெற்ற சிவசங்கரன் பிள்ளை சில நாட்களுக்குப் பின்னர்
கான்சாகிபைச் சந்திக்க மதுரை சென்றார். எட்டய
புரத்தில் முகாமிட்டிருந்த கான்சாகிப் படைகளும்
சிறிது சிறிதாக மதுரை சென்றது. எட்டயபுரத்தில்
கான்சாகிப் படைகள் இல்லாத செய்தி, அபிஷேகம்
பிள்ளை என்பவர் மூலம் பெருநாழியிலிருந்த ஜமீன்
தாருக்குத் தெரியவந்தது. மீண்டும் எட்டயபுரத்தை
விடுவிக்க மூன்றும் முறையாக முயற்சி எடுக்கப்பட்டது
மறுபடியும் பெருநாழி. மாவிலோடை, பெத்தா நாயக்
கனூர் ஆகிய கிராமங்களை போர் பாசறைகளாகக்
கொண்டு படை திரட்டப்பட்டது. ஆயிரக் கணக்கான
போர் வீரர்களைத் திரட்டி எட்டயபுரத்தைத் தாக்கினார்
கள். எட்டயபுரத்தில் ஆட்சி புரிந்துகொண்டிருந்த
குருமலைத்துரைக்கு படையெடுப்புச் செய்தி [illegible]
வந்தது. தன்னிடமுள்ள படை பலத்தைக் கொ[illegible]



எட்டப்பரை எதிர்க்க முடியாது என குருமலைத்துரை
எண்ணினார். ஆகவே எட்டயபுரத்தினின்று அகன்று
குருமலைத்துரை கசவன்குன்று சென்று விட்டார்.
மக்கள் படையுடன் பெருநாழியில் வாழ்ந்துவந்த எட்
டபுரம் ஜமீன்தார் எட்டயபுரத்தை மீட்டுக்கொண்டார்
மூன்றும்முறை எடுத்த முயற்சியால் கும்பினி தளபதி
கான்சாகிபும் அவரது ஏஜெண்டுகளின் பிடியிலிருந்து
எட்டயபுரம் மீண்டது. கும்பினியை எதிர்த்து பாஞ்சா
லங்குறிச்சி நடத்திய போருக்கு (1799) முன்பு எட்டய
புரம் மக்கள் நடத்திய இப்போர் தமிழக வரலாற்றில்
சிறப்பான நிகழ்ச்சியாகும்.

ஆட்சியைக்கைப்பற்றிய உடன்வெங்கடேஸ்வர
எட்டப்பநாயக்கர் பெத்தா நாயக்கனூர் கோட்டையில்
தனக்காக போரில் ஈடுபட்டு கைகளை இழந்த வீரர்க
ளுக்கும், போரில் மாண்ட வீரர்களின் குடும்பங்களுக்
கும், நடுக்காட்டுச் சீமையில் பீரங்கிக்குண்டுகளுக்கு
இரையாக்கப்பட்ட தன்னுடைய தளபதிகளின் குடும்
பங்களுக்கும் வளம்மிகுந்த நிலங்களை ரத்த மானியமாக
கொடுத்தார்.

மதுரையில் கான்சாகிபைச் சந்திக்கச் சென்ற
சிவசங்கரன் பிள்ளை மீண்டும் எட்டயபுரம் திரும்ப
எண்ணம் கொண்டார். எட்டயபுரத்திற்கு வருகின்ற
வழியில், சேத்தூரில் பெருநாழியிலிருந்த வெங்கடேஸ்
வர எட்டப்ப நாயக்கர் எட்டயபுரத்தை விடுவித்து
ஆட்சிப் பொறுப்பேற்ற செய்தி அறிந்தார். இதனால்
அவர் எட்டயபுரம் வருகை புரியாமல் சேத்தூரிலேயே
தங்கிவிட்டார்.

எட்டயபுரத்தை பெருமுயற்சியால் கான்சாகிபி
டமிருந்து விடுவித்த சில நாளில் எட்டயபுரத்தில்
மீண்டும் சோக நிகழ்ச்சி நடைபெற்றது. தந்தையை
பறிகொடுத்து, எட்டயபுரத்தை மீட்க மூன்று முறை
படையெடுத்த இந்தஜமீன்தார் திடீரென்றுகாலமானார்.

நடுவிற்பட்டியிலுள்ள விநாயகர் கோவிலுக்குச் சென்ற போது, சுவாமி தரிசனம் முடிந்து கோவிலைச் சுற்றி வலம் வருகையில் மாரடைப்பால் உயிர் நீத்தார். இவருடைய மரணத்தால் எட்டயபுரம் சோக வெள்ளத்தில் மூழ்கியது. இவருக்கு உடன் பிறந்தவர்களோ அல்லது குழந்தைகளோ கிடையாது. கும்பினிப் போரில் ஈடுபட்டு எட்டயபுரத்தை விடுவிப்பதில் காலங்கழித்த இவர் திருமணம் செய்துகொள்ளவில்லை. என தெரிகிறது

**சிவசங்கரம் பிள்ளை ஓடை.**


வாரிசு உரிமையின்படி, கசவன்குன்றுக்குச் சென்ற குருமலைத் துரை மறுபடியும் எட்டயபுரம் வந்து ஜமீன் பொறுப்பை ஏற்றார். குருமலைத் துரை மீண்டும் எட்டயபுரம் ஜமீன்தாரான செய்தி சேத்தூரில் தங்கிய சிவசங்கரன் பிள்ளைக்குத் தெரிய வந்தது. குருமலைத் துரைக்குப் பல உதவிகள் புரிந்துவரும் அவரின் நண்பருமான சிவசங்கரன் பிள்ளை தனக்கு அமைச்சர் பதவி வேண்டி எட்டயபுரம் வந்தார். நடுவிற்பட்டியில் தங்கி குருமலைத் துரையிடம் தொடர்பு கொண்டார். சிவசங்கரம் பிள்ளை எட்டயபுரம் வந்த செய்தி ஜமீன் தளபதிகளான எட்டுப் பிள்ளை, சங்கரலிங்கம் பிள்ளை ஆகிய வீரர்களுக்கு தெரிந்தது. பெத்தாநாயக்கனூர் கோட்டையில் தங்களது உறவினர்களை, நண்பர்களை போர் வீரர்களை பலி கொடுத்த அந்த வீரர்கள் சிவசங்கரன் பிள்ளையை பழிதீர்க்க சங்கல்பம் செய்தார்கள். பொறுமையை தாங்கவொண்ணு நிலையில், அவர்கள் உடன் குருமலைத்துரையிடம் சென்று 'சிவசங்கரன் பிள்ளையின் கால்தூசி இந்த மண்ணில் பதியக் கூடாது' எனக்கூறி அவரை வெட்டி எறிய அனுமதி வேண்டி உடைவாளை உருவி நின்றார்கள். பாவம் குருமலைத் துரை என்ன செய்வார்? பழைய நட்பையும், புதிய பொறுப்பையும் தட்டிக்கழிக்க முடியாத அவர் மௌனமாக இருப்பதை கண்ட அவ்விருவரும் உருவிய வாளை சம்மதம் தெரிக்காத குருமலைத் துரையின் கைகளில் ஒற்றியெடுத்து



விட்டு, வேகமாக வெளியே சென்றார்கள். தங்கள் தாயகத்தின் எதிரியாகிய சிவசங்கரன் பிள்ளையை பிடித்துக் கட்டி, வடக்குக் கழுவன் திரட்டு ஓடைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு உடைவாள் பிடித்த கைகள் தளர்ச்சி அடையும் வரை சிவசங்கரன் பிள்ளையை துண்டம் துண்டமாக வெட்டிக்கொன்றார்கள். இதற்கு பின்பு, இந்த ஓடை சிவசங்கரன் பிள்ளை ஓடை எனப் பெயர் பெற்றது. (இந்த ஓடை பாரதி மணிமண்டபத்திற்கு பின்புறம் உள்ளது)

இதே காலகட்டத்தில் எட்டயபுரம் 'ஜமீன் எல் கையை ஒட்டி குருமலைக்கு அருகிலிருந்த எட்டயபுரம் ஜமீனைச் சேர்ந்த வெங்கடேஸ்வரபுரம் கோட்டை மீது பாஞ்சாலங்குறிச்சியார் படையெடுத்தார்கள். இதைக் கேள்விபட்டதும் எட்டயபுரம் ஜமீன்தார் வெங்கடேஸ் வரபுரம் கோட்டையை தாக்குதலின்றி பாதுகாக்க தனது தளபதிகளான ராமநாத பிள்ளை, மாணிக்க வாசகம் பிள்ளை ஆகிய இருவர்களின் தலைமையிலும் பல போர் வீரர்களை அனுப்பினார். ஆனால் போரில் இரண்டு தளபதிகளும் படுகாயமடைந்தார்கள். இதில் ராமநாத பிள்ளை கோட்டை வாயிலேயே இறந்து விட்டார். மாணிக்கவாசகம் பிள்ளை போர் காயங்களுடன் எட்டயபுரம் திரும்பினார்.

எட்டயபுரத்தில் பதவியேற்ற குருமலைத்துரை எட்டயபுரத்தை 1783ம் ஆண்டு வரை 14 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.



# 8. முதல் பாஞ்சாலங்குறிச்சி போர்

**(1783-1816)**

எட்டயபுரத்தை அரசாண்ட குருமலைத்துரைக்கும் சந்ததியினர் இல்லை. இதனால் இவருடைய மூன்றும் தயாதியார்களில் ஒருவரான குருமலை குமாரமுத்து நாயக்கருடைய மூத்த குமாரரான முத்து ஜெகவீரராம குமார எட்டப்ப நாயக்கர் அய்யன் 1783-ல் ஆட்சிக்கு வந்தார். ஏற்கெனவே, ஆதனூர் கோட்டையையும் தாக்கிக் கைப்பற்றிக்கொண்ட பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்கள் மேலும் தங்களது படைவலிமையை பெருக்கத்தொடங்கினார்கள். பாஞ்சாலங்குறிச்சிப்படை மேலும் மேலும் வலிமை பெற்றது.

இதன் காரணமாக, எட்டயபுரம் ஜமீன்தார் தன்னை பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு பெரும் படை ஒன்றைத் திரட்டுவதில் ஈடுபட்டார். கணக்கற்ற போர் வீரர்கள் இவரது படையில் சேர்ந்தார்கள். இந்த படையில் 6000க்கும் மேற்பட்ட போர் வீரர்கள் இருந்தார்கள். மேலும் இவருடைய சகோதரர்களான ஜெகவீரெட்டு, குமாரமுத்து, ராமசாமி, வெங்கடேஸ்வரட்டு, ஆகிய நாலவரும் பெரும்பான்மை எண்ணிக்கைகொண்ட இந்தப்படை வீரர்களுக்கு தளபதிகளாக இருந்து பணியாற்றினார்கள். இவ்வாறு எட்டயபுரமும் தனது படைவலிமையை பெருக்கிக்கொண்டது.

இந்தச் சூழ்நிலையில்தான், ஆங்கில கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு பாஞ்சாலங்குறிச்சி வரி பாக்கி செலுத்தவேண்டியுள்ளது என கம்பெனி அறிவித்தது. பாஞ்சாலங்குறிச்சி பாளையம் 6000 கலிப்பணம் (அதாவது ரூபாய் 10500) வரி பாக்கி இருப்பதாகவும், அதை உடன் செலுத்தவேண்டுமென்றும் கம்பெனி பாஞ்சாலங்குறிச்சி பாளையத்திற்கு நோட்டீஸ் அனுப்பியது. இவ்வாறு கும்பினியாருக்கும் பாஞ்சாலங்குறிச்சிக்கும் ஏற்பட்ட வரி பாக்கி தாவாக்கள் முற்றி இருதரப்பினருக்குமிடையே தீராப்பகை மூண்டு, 1793ம் ஆண்டில் போருக்குண்டான சூழ்நிலையை உருவாக்கியது. காலவெள்ளத்தில் கும்பினி பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின்மீது படையெடுக்கத் திட்டமிட்டது. இதன்படி 1799ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ந் தேதி மாலை ஆங்கில தளபதி பேனர்மேன் பாளையங்கோட்டை நோக்கிப் புறப்பட்டுவந்தார். மறுநாள் 5ந் தேதி காலை பாஞ்சாலங்குறிச்சி கோட்டை ஆங்கிலக்கும்பினி வீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டது.

இதற்குப் பின்பும், அநேக காரியதரிசிகளையும் மொழிபெயர்ப்பாளர்களையும் பானர்மேன் கட்டபொம்முவிடம் தூது அனுப்பினார். ஆனால், கட்டபொம்மு தன்னையொரு பாளையக்காரன் என்றமுறையில்கும்பினி மதிப்புக்கொடுக்காத வரையில் தான் பேசப்போவதில்லை, பணியப்போவதில்லை என்று கூறிவிட்டார். ஆனால் பானர்மேன் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதையடுத்து சமரசப் பேச்சுவார்த்தை முறிந்தது. இதைதொடர்ந்து கும்பினிப்படைகள் கோட்டையைத் தாக்கத் துவங்கி தெற்குவாசல் வழியாக உள்ளே நுழைந்தன. கோட்டைக்குள் ஆங்கிலப்படை வீரர்களுக்கும் பாஞ்சாலங்குறிச்சி வீரர்களுக்கும் பெரும்போர் நடைபெற்றது. அன்று மாலை வரை ஆங்கிலப்படைகள் போரில் ஈடுபட்டுசோர்ந்துவிட்டார்கள். இதற்கிடையே பாளையங்கோட்டையினின்று படைகளையும் துப்பாக்கிகளையும் அனுப்ப உத்திரவு பிறப்பித்தார். இதற்கொப்ப கும்பினி படைகள் பாளையங்கோட்டையிலிருந்து மேலும் மேலும் பாஞ்சாலங்குறிச்சி வந்து குவிந்தன. இத்தகையபடைக்குவிப்பின் தன்மையை கட்டபொம்மு மிகவும் கவனமாக உற்று நோக்கினார். தன்னுடைய போர் வீரர்களைவிட ஆங்கிலப்படை வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்ததைக் கண்டு கட்டபொம்மு

அதிர்ச்சி அடைந்தார். உடனே கோட்டைக்குள் இருந்த தன்னுடைய மனைவி, குழந்தைகளை பாதுகாப்போடு தூத்துக்குடிக்கு ஒரு நண்பர் வீட்டுக்கு அனுப்பிவிட்டார். அதன் பின்பு, தன்னுடைய முக்கிய படைவீரர்களோடு கோட்டையைவிட்டு வெளியேறிவிட்டார்

பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை விட்டகன்ற கட்டபொம்முவும், அவருடைய வீரர்கள்சிலரும் கோல்வார்பட்டி போய் சேர்ந்தார்கள். அங்கிருந்து பல இடங்களுக்குச்சென்று, இறுதியாக புதுக்கோட்டை சென்று அடைந்தார்கள். புதுக்கோட்டைத் தொண்டைமான் கொடுத்த தகவலின்படி வீரபாண்டிய கட்டபொம்மு கும்பினியாரால் கைது செய்யப்பட்டு, மதுரை வழியாக கயத்தாறு கொண்டுவரப்பட்டார். அங்கு ஆங்கிலத் தளபதிகளால் விசாரிக்கப்பட்டு, 1799ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் தேதி கொடூரமாகத் தூக்கிலிடப்பட்டார். ஆனாலும், தனக்களிக்கப்பட்ட தண்டனை பற்றி கட்டபொம்மு வருந்தவில்லை. மாறாக, தான் கோட்டை வாசலிலே வீர மரணம் அடைந்திருக்க வேண்டுமென்று கூறி தன்னைப் பற்றி வருத்தப் பட்டுக்கொண்டார். கும்பினித் துருப்புக்களை எதிர்த்து பாஞ்சாலங்குறிச்சி பாளையம் போரிட்டது, இறுதியில் கட்டபொம்மு தூக்கிலிடப்பட்டது தமிழக வரலாற்றில் மிக முக்கிய நிகழ்ச்சியாகும்.

**பாஞ்சாலங்குறிச்சியில் இரண்டாவது போர்.**

வீரபாண்டிய கட்டபொம்மு தூக்கிலிடப்பட்ட பின்பு, அவருடைய தம்பி ஊமை குமாரசாமி நாயக்கர் மைத்துனர் முத்தையா நாயக்கர், குமாரசாமி நாயக்கர் முத்துக்குமாரசாமி நாயக்கர், மற்றும் கட்டபொம்முவின் நம்பிக்கைக்குரிய அவரின் உற்ற நண்பர்கள், வீரமணியகாரன், மெய்க்காப்பாளரான காக்கிளியன் ஆகிய ஆறுபேர்களையும் கும்பினியார் பாளையங்கோட்டை சிறையில் அடைத்தார்கள்.



வீரபாண்டிய கட்டபொம்மு தூக்கிலிடப்பட்ட நிகழ்ச்சி பாஞ்சாலங்குறிச்சி மக்களிடையே பெரும் கொந்தளிப்பை உண்டாக்கியது. இந்த கொந்தளிப்பு நிலைமை காலவெள்ளத்தில் எரிமலையாக குமுறியது. 1801ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ந் தேதி பாஞ்சாலங்குறிச்சி மக்கள் வெகுண்டெழுந்து பாளையங்கோட்டை நோக்கிப் புறப்பட்டுச்சென்றார்கள். பாளையங்கோட்டை சிறைச்சாலை கதவுகளை நொறுக்கி எறிந்து விட்டு சிறைபட்டிருந்த ஊமை குமாரசாமி நாயக்கர் உட்பட ஆறு வீரர்களையும், விடுதலை செய்து, பாஞ்சாலங்குறிச்சி வந்து சேர்ந்தார்கள். அழிக்கப்பட்ட பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டை மீண்டும் களிமண்ணும் கம்மச் சக்கையும் கலந்து கட்டப்பட்டது. கோட்டை எழுப்பப்பட்ட செய்தி அறிந்த கும்பினி படைத் தளபதிகள் மறுபடியும் பாஞ்சாலங்குறிச்சி மீது போர்தொடுத்தார்கள். பாஞ்சை வீரர்கள் தங்கள் ஆருயிரைத் திரணமாக மதித்து ஆங்கிலேயரை எதிர்த்து போர் புரிந்தார்கள். இவ்வாறு கும்பினியை எதிர்த்து பாஞ்சாலங்குறிச்சி வீரர்கள் புரிந்த வீரப்போர் நான்கு மாதங்கள் நடைபெற்றது. இறுதியில், பாஞ்சாலங்குறிச்சிவீழ்ச்சியுற்றது கோட்டை தரைமட்டமாக அழிக்கப்பட்டது. கணக்கற்ற பாஞ்சை வீரர்கள் போரில் மாண்டனர். ஆங்கில கும்பினியை எதிர்த்து பாஞ்சாலங்குறிச்சி மக்கள் நடத்திய இப்போர் தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ளது.

ஏற்கெனவே ஆகனூர் வீழ்ச்சியுற்றதாலும் வெங்கடேஸ்வரபுரம் கோட்டை தாக்கப்பட்டதாலும் எட்டயபுரத்துக்கும் பாஞ்சாலங்குறிச்சிக்கும் தீராப்பகை நிலவி வந்தது. இதனால் பாஞ்சைப்போரில் எட்டயபுரம் கும்பினிக்கு ஆதரவாக போரிட்டது. பாஞ்சாலங்குறிச்சி போருக்குப் பின்பு, பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்த்து 6 வனிதங்கள் எட்டயபுரம் ஜமீனுடன் சேர்க்கப்பட்டன. இக்கால கட்டத்தில் எட்டயபுரத்தை அரசாட்சி புரிந்த முத்து ஜெகவீரகுமார எட்டப்பநாயக்கர் 1783முதல் 1816வரை 33ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.

# 9. நிர்மாணப் பணிகள் துவக்கம்

**(1816-1868)**

பாஞ்சைப் போருக்குப்பின்னுல், திருநெல்வேலி சீமையில் போர் மேகங்கள் அகன்று பூர்ண அமைதி நிலவியது. பாஞ்சாலங்குறிச்சி போரில் ஈடுபட்ட ஜமீன் [illegible] ின்னுல் அவர் குமாரர் வெங்கடேஸ்வர எட்டப்ப நாயக்கர் அய்யன் ஜமீன்தாராக பதவி ஏற்ருர். இவரது காலத்தில் நிர்மாண வேலைகள் அசுர வேகத்தில் துவங்கின.

நாகலாபுரத்திற்கு அருகிலுள்ள கோவில் குமாரட்டையாபுரம், கழுகுமலை, குளத்துள்வாய்பட்டி, எட்டயபுரம், வேடநத்தம், புதியம்புத்தூர் ஆகிய ஊர்களில் கோவில்கள், குடிதண்ணீர் தெப்பக்குளங்கள் சத்திரங்கள் முதலியன கட்டப்பட்டன. இத்துடன், எட்டயபுரம் அரண்மனையில் பல புதிய கட்டிடங்கள் எழுப்பப்பட்டன.

தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இவர் புலமை உடையவர். சங்கீதத்தில், இவருக்கு நல்ல ஞானமுண்டு. சிறந்த வைணீகர். தெலுங்கில் கீர்த்தனமும், பல விருத்தப் பாக்களும் இயற்றியுள்ளார். இவர் காலத்தில் தான் பாலுசாமி தீக்ஷிதர் (முத்துசாமி தீக்ஷிதரின் தம்பி) ஆஸ்தான வித்துவாஞக இருந்தார்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகிய முத்துசாமி தீக்ஷிதர் இக்கால கட்டத்தில் தான் எட்டயபுரம் வந்தார். ஜமீன்தாரின் வேண்டுகோளின்படி, எட்டயபுரத்



தில் வாழத் தொடங்கினுர். இங்கு தங்கியிருந்த காலத்
தில் கழுகுமலை, திருநெல்வேலி, திருச்செந்தூர், கல்லி
டைக்குறிச்சி, சபரிமலை ஆகிய இடங்களுக்குச் சென்று
அங்குள்ள கோவில்களைப் பற்றி கீர்த்தனைகள் இயற்றி
ஞர். 1835-ல் முத்துசாமி தீக்ஷிதர் எட்டயபுரத்தில்
இயற்கை எய்தினுர். இந்த ஜமீன்தாரின் பெயரில்
முத்துசாமி தீக்ஷிதர் ''வெங்கடெஸ்வர எட்டப்ப பூபதி
மாச்மரயேஹம்'' என்ற கீர்த்தனையை மேகரஞ்சனியில்
பாடியுள்ளார். சமஸ்கிருதப் புலவர்களும், அறிஞர்
களும், சங்கீத வித்வான்களும் இவரது ஆட்சி காலத்
தில் எட்டயபுரம் அரசவையை அலங்கரித்தார்கள்.
1816ம் ஆண்டு முதல் 1839ம் ஆண்டு வரை இவர் 23
ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

## ஐவ ராஜாக்கள்.

சங்கீத மேதை முத்துசாமி தீக்ஷிதரால் புகழப்
பட்ட ஜமீன்தாருக்கு முறையே ஜெகவீர ராம குமார
எட்டப்ப நாயக்கர் அய்யன் வெங்கடேஸ்வர எட்டப்ப
நாயக்கர், முத்துசாமி பாண்டியன், குமார முத்து
பாண்டியன், ராமசாமி பாண்டியன் ஆகிய ஐந்து புதல்
வர்கள் உண்டு. இவர்களில் மூத்தவரான ஜெகவீரராம
குமார எட்டப்ப நாயக்கர் அய்யன் 1839ல் பதவிக்கு
வந்தார். இவர் தனது ஆட்சி காலத்தில் குறிப்பிடத்
தக்க சில நற்பணிகள் அபிவிருத்தி வேலைகள் செய்தார்.

அரண்மனைக் கோட்டை முழுவதும் மண் கோட்
டையாக இருந்ததை இடித்து விட்டு, செங்கல்லும் சுண்
ணும்புமாக கலந்து கோட்டை கட்டப்பட்டது அரண்
மனைக்கு வடகிழக்குப் பகுதியில் 'சண்முக விலாசம்'
என்ற கட்டிடத்தைக் கட்டி முடித்தார். நடுவிற்பட்
டிக்குச் செல்லும் சாலையை செப்பனிட்டு எட்டயபுரம்-
நடுவிற்பட்டி இணைப்புச் சாலை அமைத்தார். மேலும்
இவர் காலத்தில் நடுவிற்பட்டி, புதுப்பட்டி ஆகிய
இடங்களிலுள்ள குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு கல்

பதித்தசுவர்கள் நான்குபக்கங்களிலும்எழுப்பப்பட்டன

சிவன் கோவில், பெருமாள் கோவில் ஆகிய இரு கோவில்களிலும் ரூபாய் 25000 செலவிட்டு ஆண்டு தோறும் உற்சவங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப் பட்டன. கழுகுமலை சுப்பிரமணியர் கோவிலுக்கு சுமார் ரூபாய் 7500 வருமானமுள்ள 15 கிராமங்கள் மானிய மாக வழங்கப்பட்டன. கழுகுமலைக் கோவிலில் பெரிய மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டது. ரூபாய் 70,000 பெறுமான தங்க, வைர நகைகள் கோவிலுக்கு அளிக் கப்பட்டன. கங்கை கொண்டானில் சிற்றூரில் ரூபாய் 6000 செலவில் மேம்பாலம் கட்டினார். பிரிட்டீஷ் அரசு இதற்கு பாராட்டுத் தெரிவித்து இந்த பாலத்திற்கு வட திசையில் பனைமரங்கள் கொண்ட 25 காணி நிலத்தை மானியமாக அளித்தது. இரண்டு கிராமங்களில் வரும் வருமானம் ரூபாய் 1500யை கொண்டு செலவுசெய்யும் விதத்தில் வேப்பிலைப்பட்டியில் ஒரு சத்திரம் கட்டப்பட் டது. இது ஒரு தர்ம ஸ்தாபனமாக நிறுவப்பட்டது.

இந்த ஜமீன்தார் சிறந்த கவிஞராவார். இவர் காவியம், நாடகம், கலை முதலியவற்றில் நல்ல புலமை உடையவர். சமஸ்கிருதத்தில் சிவ, விஷ்ணு, சுப்பிர மணிய கடவுள்களைப் பற்றிப் புகழ்ந்து பாடல்கள் இயற் றியுள்ளார்கள். இது தவிர, கீர்த்தனைகளும், சுலோ கங்களும் எழுதியுள்ளார். பாலுசாமி தீக்ஷிதர், இந்த ஜமீன்தார் காலத்திலும் ஆஸ்தான வித்துவானாக விளங் கினார். இந்த ஜமீன்தார் 1839 – 1852 முடிய 13 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

இவருக்கும் சந்ததி இல்லாத காரணத்தினால் இவருடைய தம்பி ஜெகவீரராம குமார வெங்கடேஸ்வர எட்டப்ப நாயக்கர் அய்யன் 1852ம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார். இவர் காலத்தில் முடிசூட்டும் மண்டபமும், அதில் ஐந்து தங்க ஸ்தூபிகளுடன் மிகவும் கலையழகு டன் கொண்ட 'செச்சை' (முடிசூட்டும் மண்டபம்)



ரூபாய் 30,000 செலவில் கட்டப்பட்டது.

இவர் தமிழில் நல்ல புலமையுடையவர் சங்கீத
மேதை. வீணை, ஸ்வரபதி, ஸீத்தார், ஜலதரங்கம்.
மிருதங்கம், கடம் ஆகிய வாத்தியங்களை வாசிப்பதில்
திறமையுடையவர். பாடுவதில் இரண்டாவது நாரத
ரென்று புகழப்பட்டவர். இவரின் ராக ஆலாபனை மத்
தியமகால பல்லவி பாடும் முறை எளிமையாக சாதுர்ய
மாக முத்துக்கள் கோர்த்த மாதிரி சுவாரசியமாக இருக்
குமாம். இந்த ஜமீன்தார் காலத்தில் பாலுசாமி தீக்ஷி
தரின் மகள் அன்னபூர்ணியின் குமாரரும், தீக்ஷிதரின்
ஸ்வீகார புத்திரருமான சுப்புராம தீக்ஷிதர் ஆஸ்தான
வித்துவானாக இருந்தார். சுப்புராம தீக்ஷிதர் மிகப் புகழ்
பெற்ற சங்கீத வித்துவானாவார். இந்த ஜமீன்தார்
1852–1858 முடிய 6 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

இவருக்கும் புத்திரர்கள் இல்லாத காரணத்தி
னால் இவருடைய தம்பி முத்துசாமி பாண்டியன் ஆட்சி
பொறுப்பை ஏற்றார். இவர் கழுகுமலை கோவிலுக்கு
ரதமும், வெள்ளி வாகனங்களும் செய்து அன்பளிப்பாக
அளித்தார். இவர் சங்கீதத்தில் நல்ல ஞானம் உடை
யவர். சங்கீதத்தில் தெலுங்கு வியாகரணம் முதலான
லக்ஷணங்களை அறிந்திருந்தார். மேலும் இவர் சங்கீதம்
எழுதும் முறையை (ஸ்டாப் நொடேஷன்) திறம்படக்
கற்றிருந்தார். இவரிடமிருந்தே இம்முறையை தான்
கற்றுக்கொண்டதாக சுப்புராம தீக்ஷிதர் தாம் எழுதிய
'சங்கீத சம்பிரதாய பிரியதர்சினி என்ற நூலின் முக
வுரையில் கூறியுள்ளார்.

இந்த ஜமீன்தார் காலத்தில்தான், சுவாமி
தீக்ஷிதர் கந்த புராணத்தின் ஒரு பகுதியை 'சம்புகாவி
யமாக' இயற்றினார். சம்புகாவியம் கழுகுமலைகோவிலில்
அரங்கேற்றப்பட்டது. தமிழ் இலக்கியத்தில் "உலா"
என்றும் 'மடல்' என்றும் இரண்டு வகைகள் உண்டு.
இரண்டுவகைகளையும் இணைத்து பெத்தணன் தளவாய்
இந்தஜமீன்தார் காலத்தில் 'உலாமடல்' எனும் புது
மையான கவிதை நூலை எழுதினார். முத்துசாமி பாண்
டியன் 1858 – 1868 பத்தாண்டு ஆட்சிபுரிந்தார்

# 10. வறட்சி நிவாரணப் பணிகள்

**(1868–1890)**

பிதா மகாராஜா என்று எல்லோராலும் அன்
போடு அழைக்கப்பட்ட ஜெகவீரராமகுமார எட்டப்ப
நாயக்கர் 1868ம் ஆண்டு ஜமீன்தாரானார். இவரது
ஆட்சிகாலத்தில், அதாவது 1877–78ம் ஆண்டுகளிலே
கொடுமையான பஞ்சம் நிலவியது. கடுமையான பஞ்
சத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற இவர் அநேக நிவா
ரண வேலைகளை மேற்கொண்டார். தன்னுடைய ஜமீன்
கிராமங்களில் 'உணவு விடுதிகள்' நிறுவி, பொதுமக்
களுக்கு இலவச உணவு விநியோகம் செய்தார். வறட்
சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், பஞ்சத்திற்கு
பின்பு, நிலத்தைப் பயிரிடவும் சாகுபடி செய்யவும்
கடன் வழங்கினார். அத்தோடு பயிர்மானியம் வழங்
கினார். விவசாயிகளுக்கு எல்லாவிதமான சலுகைகளும்
அளிக்கப்பட்டன. கால்நடைகளுக்கு தீவனம் இனாமா
கவும், குறைந்த விலையிலும் கொடுக்கப்பட்டது. இந்த
கொடிய வறட்சி நிலைமைக்குப்பிறகு, பாசன வசதிக்
காக, ஜமீனில் உள்ள கண்மாய்கள் இவரது காலத்தில்
ஆழப்படுத்தப்பட்டன. இதனால் விவசாயிகள் பய
னுற்றார்கள்.

பிதா மகாராஜா திருவாங்கூர் ராஜாவை சந்திக்
கும் பொருட்டு திருவாங்கூர் சென்றார். அங்குஇவருக்கு
மிக உற்சாகமான முறையில் வரவேற்பு அளிக்கப்
பட்டது. அப்பொழுது அங்கு 'ஊட்டுப்பறை' என்று
அழைக்கப்படும் உணவுவிடுதிகள் 64 அமைந்திருப்பதை
பார்வையிட்டார். இவரது வருகையை முன்னிட்டு
திருவாங்கூர் ராஜா இவருக்கு அனந்தபத்மநாதசுவாமி
விக்கிரகமுள்ள சிறிய வெள்ளி ரதத்தை அன்பளிப்பாக



கொடுத்தார். இவர் எட்டயபுரம் திரும்பியதும் விவசாய
முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தினார். திரு
வாங்கூரில் ''ஊட்டுப்பறை'' அமைத்தது போல,
தனது ஜமீனில் 64 விவசாயப்பண்ணைகளை ஏற்படுத்த
முயற்சித்தார். ஜமீனைச் சேர்ந்த பல்வேறு கிராமங்
களில் சிதறிக்கிடந்த நிலமனைத்தையும் ஒன்றுசேர்த்து
ஆங்காங்கே விவசாயப்பண்ணைகள் ஏற்படுத்தத் துவங்
கினார். மேலும் ஜமீனில் பொருளாதாரத் துறையில்
சிக்கன நடவடிக்கைகள் மேற்கொண்டதின் பேரில்
சேமிக்கப்பட்ட பணத்தை அபிவிருத்தி வேலைகளுக்கு
செலவிட்டார். அரசாங்க சேமிப்பு நிதியில் முதலீடு
செய்தார். ஜமீனுக்கு பல நிலப் பகுதிகளையும் விலைக்கு
வாங்கினார்.

எட்டயபுரத்தைச் சுற்றி ரத வீதிகளை அமைத்
தார். இதனால் நகர் தனிச்சிறப்புடன் விளங்கியது.
நாலாட்டின்புத்தூரிலிருந்து கழுகுமலைக்குச் செல்லும்
சாலை அமைக்க நிதி உதவி அளித்தார். ஸ்ரீவைகுண்
டத்தில் தாமிரபரணிக்குக்குறுக்கே பாலம்கட்ட ரூபாய்
35000 அன்றைய மாவட்டக் கழகத்திற்கு (Distrit
Board) அன்பளிப்பு நல்கினார். இதுதவிர, ஜமீன் தலை
நகரான எட்டயபுரத்தில் சுமார் ரூபாய் இரண்டுலட்சம்
செலவில் புதிய அரண்மனைக் கட்டிடங்களை மிகவும்
கவர்ச்சியான முறையில் கட்டினார். நவீன முறையில்
கட்டப்பட்ட இந்த அரண்மனை இல்லங்களில் எல்லா
வசதிகளும், பாதுகாப்பும் பேணப்பட்டிருந்தன.
ஜமீனில் அநேக கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகள்
துவங்கி கல்வி அபிவிருத்திக்கு ஏற்பாடுகள் செய்தார்.
இதுதவிர, பலகிராமங்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்
களும் நிறுவப்பட்டன.

**தூத்துக்குடி–மணியாச்சி ரயில் பாதை.**

இந்த ஜமீன்தார் ஆட்சிகாலத்தில் பிரிட்டிஷ்
[illegible]த்தில் இளவரசராகிய ஏழாம் எட்வர்ட் இந்தியா
[illegible]கு விஜயம் செய்தார், தூத்துக்குடிவந்த இளவரசரை

இவர் தனது பரிவாரங்களுடன் தூத்துக்குடி சென்று வரவேற்றார். 1875ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம்தேதி தூத்துக்குடி—மணியாச்சி ரயில் பாதையை ஏழாம் எட்வர்டு தொடங்கி வைத்தார். முதல் முதல் புறப்பட்ட ரயிலில் அவருடன் ஜமீன்தார் தூத்துக்குடியிலிருந்து கோவில்பட்டி வரை பிரயாணம் செய்தார்.

மணியாச்சி ஜங்ஷனில் பிரிட்டிஷ் இளவரசருக்கு பிரம்மாண்டமான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பில், பிராட்டஸ்டண்டு, கத்தோலிக்க கிருஸ்தவர்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டார்கள். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்த கிருஸ்தவ மதத் தலைவர்களான பிஷப் கால்டுவேல், ரெவரண்ட் செர்ஜியண்ட் (**Rev. Dr. Seargeant**) ஆகியோர் வரவேற்பு நிகழ்ச்சியில் முக்கிய பங்கு பெற்றார்கள். பிஷப் கால்டுவெல் வரவேற்பு இதழ் வாசித்து அளித்தார்.

பிரிட்டிஷ் இளவரசரின் அழைப்பிற்கு இணங்க, 'பிதா மகாராஜா' 1876-ம் ஆண்டு டில்லி தர்பாருக்குச் சென்றார். டில்லி செல்லும் போதும் அங்கிருந்து திரும்பும் போதும் இவருக்கு உதவியாக, அப்போது இருந்த சென்னை அரசாங்கம் தனி அதிகாரியை உடன் அனுப்பியது.

இவர் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளை நன்கு கற்றவர். சட்ட நிபுணர். இவர் காலத்தில் ஆஸ்தான வித்துவானாக இருந்த சுப்புராம தீக்ஷிதர் தெலுங்கு மொழியிலிருந்த மகாபாரதத்தை தமிழில் மொழி பெயர்த்தார். தவிர, மற்றொரு அரசவைப் புலவரான கடிகை நமச்சிவாயப் புலவரால் இயற்றப்பட்டு 1880ம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்ற 'வல்லீ பாரதம்' என்ற நாட்டிய நாடகத்திலுள்ள பாடல்களுக்கு வர்ண மெட்டுகளையும், முத்தாயிரஸ்வங்களையும் சுப்புராம தீக்ஷிதர் ஏற்படுத்தினார். எட்டயபுரம் ஜமீன் வரலாற்றை பற்றி இரண்டு நூல்கள் இந்த ஜமீன்தார் காலத்தில்



வெளிவந்தன. ஒன்று டபிள்யூ. இ. கணபதியாபிள்ளை என்பவர் ஆங்கிலத்தில் ஜமீன் வரலாற்றை எழுதினார். (**Ettayapuram past and present** என்பது நூலின் பெயர்.) மற்றொன்று, சுவாமி தீக்ஷிதர் தமிழில் ''வம்சமணி தீபிகை'' என்று மகுடமிட்டு எட்டயபுரம் வரலாற்றை எழுதினார். வறட்சி நிவாரணப் பணிகளை செவ்வனே செய்தவரும், இலக்கிய வளர்ச்சிக்கு புரவலராக இருந்தவருமான பிதா மகாராஜா 1890-ல் காலமானார். இவர் 22 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.



## 11. சென்னை அரசாங்கத்தின் நேரடி ஆட்சி.

(Court of Wards.) **(1890–1899)**

''பிதா மகாராஜா'' என்று சிறப்புப் பெயர் கொண்ட ஜமீன்தாருக்கு ஒரே குமாரர்தான் உண்டு. பிதா மகாராஜா இறக்கும் போது இவரின் புதல்வருக்கு வயது 12. இவர்தான் பின்னாளில் 'ராஜா மகாராஜா' என்ற சிறப்புப் பெயர் கொண்ட ஜமீன்தாராக திகழ்ந்தார். ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்கும் வயதை இவர் அடையவில்லையாதலால் எட்டயபுரம் ஜமீனை நிர்வகிக்கும் பொறுப்பை சென்னை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. அப்போதைய புகழ் பெற்ற ரெவின்யூ நிர்வாகியான வெங்கட்ராயர், சென்னை சர்க்காரின் பிரதிநிதியாக எட்டயபுரம் ஜமீன் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தினார். இதற்கிடையில், இளம் வயதினராக

இருந்த இவரை (மைனர் ராஜாவை) கல்வி கற்க சென்னை நெவிங்டன் பள்ளிக்கு அரசாங்கம் அனுப்பியது. முன்னைய ஜமீன்தார்களைப் போலவே, ஜமீன் நிர்வாகத்தை நேரிடையாக நடத்திய அரசாங்க நிர்வாகிகளும் கல்வி அபிவிருத்தியிலும், விவசாயத்திலும் கவனம் செலுத்தினார்கள். சமூக நிர்மாணப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்றன.

இத்தகைய காலத்தில்தான், எட்டயபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வட்டக் கிணறுகள் தோண்டப் பட்டன. சில கிராமங்களில் துவக்கப்பள்ளிகள் திறக்கப்பட்டன. நடுவிற்பட்டியில் கடைகள் நிரம்பிய வீதிகள் தோன்றின. கழுகுமலை எட்டயபுரம் நாகலாபுரம் ஆகிய ஊர்களில் வாரச் சந்தைகள் நடைபெற்றன. மதுரை மாவட்டத்தில் இருந்த கண்டமநாயக்கனூர் ஜமீனைச் சேர்ந்த வல்லாநதிப் பகுதியை ஜமீனின் அரசாங்க நிர்வாகியான வெங்கட்ராயர் விலைக்கு வாங்கி எட்டயபுரம் ஜமீனோடு சேர்த்தார். பொதுமக்களுக்கும் விவசாயப் பண்ணை ஊழியர்களுக்கும் நேரத்தை அறிவிக்க பெரிய வெண்கலமணி செய்யப்பட்டது.

**கவிஞருக்குப் பாரதி பட்டம்.**

ஜமீன் நிர்வாகப் பொறுப்பை சென்னை அரசாங்கம் மேற்கொண்டாலும் மைனர் ஜமீன்தாரின் சிறிய தந்தையாகிய 'தாத்தா மகாராஜா' கலை இலக்கிய வளர்ச்சிப் பணிகளை தொடர்ந்து செய்து வந்தார். இக்காலகட்டத்தில் தான், எட்டயபுரம் ஜமீனைச் சேர்ந்த புலவர்கள் கூடிய பெரும் சபையில் கவிஞர் சுப்பிரமணியம் என்ற சுப்பையாவுக்கு "**பாரதி**" என்ற பட்டம் அளிக்கப்பட்டது. இதன்பின்பு, கவிஞர் சுப்பிரமணியம், மகாகவி சுப்பிரமணிய பாரதி என அழைக்கப்பட்டார். ஆங்கிலேயரின் நேரிடை நிர்வாகம் எட்டயபுரம் ஜமீனில் ஒன்பது ஆண்டுகள் நடைபெற்றது.

★

## 12. எட்டயபுரத்தின் பொற்காலம்

**(1899-1915)**

சென்னைக்கு கல்விபயிலச்சென்ற மைனர் ஜமீன்தார் (மைனர் ராஜா) ஒன்பது ஆண்டுகள் கல்வி பயின்றார். பாட்ஸ், எலிஸன்ட், மோரிஸன், பயனி போன்ற புகழ்பெற்ற ஆங்கில ஆசிரியர்களிடமும் ராவ்பகதூர் ஜெகநாத செட்டியாரிடமும் இவர் கல்வி கற்றார். கல்வி பயின்ற காலத்தில் வட இந்தியாவில் டில்லி, பரோடா, வங்காளம் ஆகிய இடங்களுக்கும், கொழும்பு தேசத்திற்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆங்காங்குள்ள மக்களின் சமூக காலாச்சார வாழ்க்கை முறைகளை அறிந்து வந்தார். அதற்குப்பின்பு, 21வயது அடைந்த இவரிடம் மீண்டும் எட்டயபுரம் ஜமீன் ஆட்சிப்பொறுப்பை சென்னை அரசாங்கம் ஒப்படைத்தது. இவர் 1899ம் ஆண்டு அதிகார பூர்வமாக எட்டயபுரம் ஜமீன்தாராக பதவி ஏற்றார். தனக்கு ஆசிரியராகவும் வளர்ப்புத் தந்தையாகவும் இருந்த ராவ்பகதூர் ஜெகநாத செட்டியாரை திவானாக நியமித்தார். நெவிங்டன் பள்ளியில் ஆசிரியராகவிளங்கிய ராவ்பகதூர் ஜெகநாத செட்டியார் எட்டயபுரம் ஜமீனின் திவான் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

**விவசாயப் பண்ணைகள்**

இவரது காலத்தில் விவசாயத்துறையில் உற்பத்தியையும், வருமானத்தையும் பெருக்க பலதிட்டங்கள் தீட்டப்பட்டன. ஜமீன் கிராமங்களில் சிதறிக் கிடந்த தரிசு நிலம் அனைத்தும் சாகுபடி செய்யப்பட்டது. இவரது தந்தை காலத்தில் துவங்கிய 64 விவசாயப் பண்ணைகளும் இவரது காலத்தில் சீராக்கப்பட்டு புதிய நிர்வாக அமைப்பிற்குள் கொண்டுவரப்பட்டன. இதன்

படி ஒவ்வொரு பண்ணைக்கும் குறைந்த பட்சம் 12 ஏர்கள் இருந்தன. இதுபோக ஒரு மேற்பார்வையாளர், (பண்ணை மானியம்) காவலர்கள் மற்றும் பல்வேறு ஊழியர்கள் பண்ணைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். இந்த பண்ணை விவசாய முறை ஜமீன் நிர்வாகத்தில் ஓர் புதுமையாக விளங்கியது. இந்த பண்ணைகளில் அறுவடையாகும் விளைபொருள்கள் எல்லாம் எட்டயபுரம் ஜமீனுக்குச் சொந்தமான தானிய களஞ்சியத்திற்கு கொண்டுவரப்பட்டன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட களஞ்சியத்தில் அதிகமாக விளைந்துள்ள தானியத்தை பண்ணை ஊழியர்களுக்கு ஜமீன்தார் கூலியாக கொடுத்து வந்தார். சராசரி மாதத்திற்கு ஒரு ஊழியருக்கு 15மரக்கால் தானியம் (பட்டணம் படிக்கு 60படி) ஊதியமாக வழங்கப்பட்டது சில நேரங்களில் வறட்சி, பஞ்சம் போன்ற நிலைமைகளின் காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டு விளைபொருள்கள் விளையாவிட்டாலும் கிராமங்களில் உள்ள பெரிய நிலப் பிரபுக்களிடம் தானியம் கடனாகப் பெற்று பண்ணைச் சிப்பந்திகளுக்கு கூலி வழங்குவது வழக்கம். எனவே பஞ்சம் ஏற்பட்டாலும் பண்ணையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு சாப்பாட்டிற்கு உத்திரவாதமிருந்தது என்று கூறலாம். மேலும் பண்ணைச் சிப்பந்திகளின் குடும்பங்களில் நடைபெறும் திருமணம், சடங்கு, காதணி விழா, மரணச் சடங்கு ஆகியவற்றிற்கு செலவிடப்படும் பணத்தை ஜமீன்தாரே வழங்கியுள்ளார். பணத்தைத் தவிர புத்தாடைகளும் வழங்கப்பட்டன. இவ்வாறு செயல்பட்டுவந்த விவசாயப் பண்ணைகளுக்கு சின்னு நாயக்கர், சாத்தூரப்ப நாயக்கர் ஆகிய இருவரும் நிர்வாகிகளாக பணியாற்றினார்கள். 64 விவசாய பண்ணைகளை மேற்பார்வையிடவும், நிர்வாகம் செய்யவும் இவ்விருவரும் பொறுப்பு எடுத்துக்கொண்டார்கள். இந்தப் பண்ணைகள் மூலம் கிடைத்த வருமானத்தில் ஒரு பகுதி அறப்பணிகளுக்கு செலவிடப்பட்டது. கல்வி முன்னேற்றம், அன்ன சத்திரங்கள் அமைத்தல்,



கோவில்கள் சீரமைப்பு, கிராம முன்னேற்ற வேலைகள் ஆகியவற்றிற்கு ஒரு பகுதி பணத்தை ஜமீன்தார் செலவிட்டார். இதுபோக கலைஞர்களின் முன்னேற்றத்திற்கும் இந்தப்பணம் செலவிடப்பட்டது.

இத்தகைய பண்ணை முறையை நாட்டிற்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு, 1905ம் ஆண்டு ரூபாய் 20,000 செலவில் விவசாயம், தொழில், கால் நடைக் கண்காட்சியை கோவில்பட்டியில் இந்த ஜமீன்தார் முன்னின்று நடத்தினர். அவ்வமயம் வருவாய்த்துறை (ரெவின்யூபோர்டு) உறுப்பினராக இருந்த *A. E.* காசில் (*A. E. Castle*) இந்தகண்காட்சியை திறந்து வைத்தார் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் வேளாண்மைத் துறை விற்பன்னர்கள் பலர் வருகை புரிந்தார்கள். தவிர, ஜமீன்தாரும் விவசாய அபிவிருத்தி முறைகளை கற்றறியும் பொருட்டு கோயம்புத்தூர் விவசாய கல்லூரிக்குச் சென்றுவந்தார் இந்தப் பயணத்தின் காரணமாக, கால்நடைகளின் அபிவிருத்திக்கு ஜமீன்கிராமங்களில் பல கேந்திரங்கள் நிறுவப்பட்டன. இவற்றில் இன அபிவிருத்திக்காக காளைகள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்டன. இவ்வாறுவிவசாய முன்னேற்றத்திற்காக பண்ணைகள் அமைத்து கால்நடைகள் விருத்திக்கு கேந்திரங்கள் நிறுவி விவசாயத்துறை வளர்ச்சிக்கு இந்த ஜமீன்தார் அரும்பாடு பட்டார்.

**ஜமீன் நிர்வாக முறைகள்.**

''ராஜா மகாராஜா'' என்ற சிறப்புப் பெயர் கொண்ட இந்தஜமீன்தார் ஜமீன் நிர்வாகத்தை சீராக்க பல நடவடிக்கைகள் மேற்கொண்டார். ஜமீன் 13 வனிதங்களாக பிரிக்கப்பட்டிருந்தது ஓவ்வொரு வனிதமும் ஒரு பேஷ்காரின் (ரெவின்யூ இன்ஸ்பெக்டர்) மேற்பார்வையில் இருந்தது. ஒவ்வொரு பேஷ்காரின் கீழும் பல கிராம அதிகாரிகள் இருந்தார்கள். அந்தந்த கிரா

மங்களில் வரிவசூல், இதரவேலைகளை கிராம அதிகாரிகள் கவனித்து வந்தார்கள். ஜமீனின் தலைமை நிர்வாக அதிகாரியாக திவான் இருந்து வந்தார். இவரின்கீழ் தாசில்தார்கள் ஜமீன் நிர்வாகங்களை கவனித்து வந்தார்கள். எட்டயபுரம் தாசில்தாராக முதன் முதலில் வெங்கு அய்யர் (சிவானந்தரின் தகப்பனார்) பொறுப்பேற்றார். இக்காலத்தில் தான் குப்புசாமி என பெயர் கொண்ட சிவானந்த சரஸ்வதி எட்டயபுரம் மன்னர் உயர்நிலைப்பள்ளியில் கல்வி பயின்றார். ரெவின்யூ நிர்வாக அனைத்தும் திவான் பொறுப்பிலேயே இருந்தது இந்த ஜமீன்தார் தலையிடுவது இல்லை. மேலும், இந்த ஜமீன்தார் காலத்தில் பொதுமக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார். தினம் மாலை 5 மணிக்கு பொது மக்களிடம் இவர் மனுக்கள் வாங்குவது வழக்கம். இவ்வாறு வாங்கிய மனுக்களை மேல் நடவடிக்கை எடுப்பதற்கு திவானுக்கு அனுப்புவது வழக்கம். திவான் ஒவ்வொரு வனிதத்திற்கும் சென்று 'ஜமாபந்தி' எனும் கிராம கணக்குகளை தணிக்கை செய்வது நடைமுறையில் இருந்தது.

**சமூக நற்பணிகள்:**

"ராஜா" பட்டம் பெற்ற இந்த ஜமீன்தார் காலத்தில் பல சமூக நலப்பணிகள் நடந்தேறின. 12 மைல் நீளமுள்ள எட்டயபுரம் விளாத்திகுளம் சாலை அமைக்க இவர் நன்கொடை வழங்கினார். எட்டயபுரத்தில் மருத்துவ மனைகட்ட இடம் அளித்தார். மேலும் மருத்துவமனைக்கு மருந்துகள் வாங்கவும், நிர்வாக செலவிற்காகவும் ஆண்டுதோறும் ரூபாய் 1000 வழங்கி வந்தார். இதுதவிர, சென்னை விக்டோரியா மருத்துவ மனைக்கும், மதுரையிலுள்ள இரண்டு அமெரிக்க மிஷன் ஆஸ்பத்திரிகளுக்கும் முறையே ரூபாய் 7000, ரூபாய் 20000 அன்பளிப்பு கொடுத்தார். எட்டயபுரத்திலிருந்த உயர்துவக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றினார். எட்டயபுரத்தில் பெண்களுக்கென்று ஒரு பள்ளி



கூடம் துவங்கப்பட்டது. மேலும் இந்தப் பள்ளிகளில் பயிலவரும் மாணவர்களுக்கு இலவசமாக உணவு, உடை வழங்கப்பட்டன. மாணவர்கள் தங்கி படிக்க மாணவர் விடுதிகள் கட்டப்பட்டன. இதுபோன்ற வசதிகள் செய்யப்பட்டகாரணத்தினால் திருநெல்வேலி மதுரை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து மாணவர்கள் எட்டயபுரம் உயர்நிலைப் பள்ளிக்கு கல்வி பயில வந்தார்கள்.

எட்டயபுரம் நகர மக்களுக்கு இந்த ஜமீன்தார் பல உதவிகள் செய்து வந்தார். உதாரணமாக, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு நிதி உதவி அளித்தார். குழந்தைகளுக்கு நிதிஉதவி அளித்தார். குழந்தைகளுக்கு அதிகாலையில் இலவசமாக குழந்தைப் பால் வழங்கப்பட்டது.

**முத்தமிழின் வளர்ச்சி**

இவரது காலத்தில் இயல், இசை, நாடகம் சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றன. விவசாயபண்ணை முறையைப்போற்றி 'இளசைப் பள்ளு' (நாடோடி இலக்கியம்) அரசவைப் புலவர் நாகூர் முத்துப்புலவரால் இயற்றப்பட்டது. இந்தப்பள்ளுப்பாட்டில் மழைக்குறிகள் பருவகால நிலைமை, உழவின்பெருமை, நதிகளில் வெள்ளம் வருதல், நஞ்சை, புஞ்சை பயிர்வகைகள், பண்ணை ஊழியர்கள், பள்ளுப்பெண்கள், களையெடுப்பு, கதிர் அறுப்பு, களம் சேர்ப்பு முதலியனபற்றி இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டுளது. விவசாயத்தை பற்றிக் கூறும் முதல் நூலாக இது விளங்கியது.

பாரதி ஜமீன்தாரின் நெருங்கிய நண்பராக இருந்தார். ராஜாமகாராஜா காசிக்கு சென்றபோது அங்கு வாழ்ந்து வந்த பாரதியை அழைத்து வந்து எட்டயபுரத்தில் அரசவைப் புலவராக்கினார். மகாகவி பாரதியும், நாவலர் சோமசுந்தர பாரதியும் ஜமீன்தாரால்

ஆதரிக்கப்பட்டார்கள். இக்காலத்தில் தான் பாரதி ஷெல்லியின் பெயரால் இலக்கியச் சங்கத்தை தோற்றுவித்தார். "வைஷ்ணவ பாசுரங்கள்" பாடியவரும், பாரதியின் நெருங்கிய நண்பருமான ராமநூத்து மணிமுத்துப்புலவர் இக்காலத்தில்தான் வாழ்ந்தார். அன்றைய காலத்தில் உலகின் பல பாகங்களிலும் வெளியிடப்பட்ட பல்வேறு பத்திரிக்கைகள், குறிப்பாக ஆங்கிலப்பத்திரிகைகள் வரவழைக்கப்பட்டு பெரிய நூலகம் அமைக்கப்பட்டது. நூல் நிலையத்தில் தமிழ் ஆங்கிலம், சமஸ்கிருத நூல்கள் இருந்தன. முதன் முதலில் இவரது காலத்தில் தான் நூலகம் அமைக்கப்பட்டது எனக் கூறலாம்.

## கர்நாடக இசையின் மறுமலர்ச்சி

இவரது ஆட்சி காலத்தில், சுப்புராம தீக்ஷிதர் ஆஸ்தான வித்துவானாக திகழ்ந்தார். இந் நாளில் சென்னை அரசாங்க அலுவலகத்தில் மேற்பார்வையாளராக (சூப்ரெண்டெண்டு) பணியாற்றிய ஏ. எம். சின்னசாமி முதலியார் 1899ம் ஆண்டு இந்த ஜமீன்தாரின் முடிசூட்டு விழாவிற்கு வருகை புரிந்தார். சின்னச்சாமி முதலியார் லத்தீன்மொழியிலும், ஆங்கிலத்திலும் நல்ல புலமை உடையவர். மேலும் கர்நாடக சங்கீதத்திலும், ஐரோப்பிய சங்கீதத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். சின்னச்சாமி முதலியார் ஜமீன்தாரையும், சுப்புராம தீக்ஷிதரையும் சந்தித்து வெங்கிட மகிமையின் சங்கீத சம்பிரதாய அடிப்படையில் சங்கீத மார்க்கத்தை விளக்கக்கூடிய ஓர் நூல் வெளிக்கொண்டு வர வேண்டினார். இந்த வேண்டுகோளுக்கு ஜமீன்தார் முழு ஆதரவு அளித்தார்.

இதற்கிடையில், கர்நாடக சங்கீத முறைகள் பற்றியும் அதை விளக்கக்கூடிய ஒரு நூல் வெளிக்கொண்டுவரும் பொருட்டும் ஐரோப்பிய சங்கீதத்தின் நுட்பங்களை அறிந்து வர சின்னச்சாமி முதலியாரின் வேண்டுகோளுக்கிணங்க சுப்புராம தீக்ஷிதர் சென்னை



சென்றார். அங்கு நான்காண்டுகள் தங்கி, ஐரோக்கிய சங்கீதத்தின் உயர்ந்த அம்சங்களை நன்கு அறிந்து திரும்பினார்.

எட்டயபுரம் திரும்பிய தீக்ஷிதர், வெங்கிட மகிமையின் சங்கீத சம்பிரதாய அடிப்படையில் "சங்கீத சம்பிரதாயப் பிரதர்சினி" என்ற சங்கீத நூலை எழுதத் தொடங்கினார். இந்நூல் ஜமீனுக்குச் சொந்தமான இளசை வித்தியாச விலாசினி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலை அச்சிட தெலுங்கு அச்சு எழுத்துக்களும், "கமக" அடையாளங்களுக்கான அச்சுக்களும், ஆந்திராவினின்று வந்து சேர்ந்தன. சின்னச்சாமி முதலியார் இதற்கு வேண்டிய உதவிகளை செய்தார். சங்கீத சம்பிரதாயப் பிரதர்சினி என்ற இந்நூல் அச்சாகும் வேலை 1901ல் துவங்கி 1904ல் முடிவுற்றது. ஆனால் இந்நூல் வெளிவருவதற்குள் இதற்கு உதவி புரிந்த சின்னச்சாமி முதலியார் இறந்துவிட்டார்

1700ம் பக்கங்கள் கொண்ட இந்நூல் இருபாகங்கள் கொண்டது. இந்நூலில் எழுபத்திரண்டு மேள ராகங்கள், அவற்றின் ஜன்ய ராகங்கள், ஆகியவற்றின் தன்மைகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. ஸ்வர தாள அடையாளங்களுடனும் தசவித, கமக விவரங்களுடனும் ஆங்கில நொடேஷன் முறையை ஆராய்ந்து; அவசியமான இடங்களில் சேர்த்து, கர்நாடக சங்கீதத்தை வித்துவான்களின் உதவியின்றி புரிந்து கொள்ளும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மேலும், கர்நாடக சங்கீதத்தின் வரலாறும், சங்கீத சாஹித்திய கர்த்தாக்களின் சரித்திரமும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இன்று கர்நாடக சங்கீதம் நிலைத்து உயிர் வாழ்ந்து வருவதற்கு ஜீவநாடியாக இந்த நூல் விளங்குகிறது. (இந்நூலை மத்திய அரசு உதவியுடன் சென்னை சங்கீத அகாடமி வெளியிட்டு வருகிறது) கர்நாடக இசைக் களஞ்சியமாக விளங்கும் இந்நூல் வெளிவர உதவிய இந்த ஜமீன்தார் இசை உலகில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார்.

## நாடகத்தில் புதுமை.

இவரது காலத்தில் நவீனமான முறையில் பல நாடகங்கள் வெளிவந்தன. முதன் முதலில் ஆங்கில நாடகசாரியார் ஷேக்ஸ்பியர் போன்றோரின் நாடகங்களை ஒட்டி அங்கம், காட்சி அமைப்புக்களுடன் நாடகங்கள் எழுதப்பட்டன. 'ஞானவல்லி' 'சுத்தசேனன்' ஆகிய இரண்டு நாடகங்களை இந்த ஜமீன்தாரே எளிய இனிய உரைநடையில் எழுதினார். தமிழில் எழுதப் பட்ட நாடகங்களை ஜமீன் ஆங்கிலப் பேராசிரியர் திரு' மலைக்கொழுந்து' ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். பல்வேறு நாடக நடிகர்களை ஆதரிக்கும் பொருட்டு ஓர் நாடகக் குழு இவரது காலத்தில் அமைக்கப்பட்டது பிரபல நாடக நடிகர் மன்னார்குடி எம். ஆர். கோவிந்தசாமி (யாழ்ப்பாணம் தமிழ் சங்கம் இவருக்கு சந்த சரவ சங்கீத சாஹித்திய கவிராஜ போஜராஜ புஜித என்ற பட்டத்தை வழங்கியது) நாடக நடிகர்களுக்கு குடியிருக்க இல்லங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன. பயிற்சி பெற்ற நாடகங்களை அரங்கேற்ற அரண்மனைக் கோட்டைக்குள் கீழ் பகுதியிலும், எட்டயபுரம் நகரின் தென்மேற்கு பகுதியிலும் நிரந்தரமாக நவீன முறையில் இரு நாடக அரங்குகள் நிர்மாணிக்கப் பட்டன.

## பேரணி நாட்டியம்.

சோழன் கரிகாற் பெருவளத்தான் அவை அரங்கிலே ஆடிய மாதவியின் ஆடலைப் பாராட்டி ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பரிசாகக் கொடுத்தான். இவ்விதம் கலைஞர்களை பாராட்டுவது அரச மரபு. இதே போன்று ராஜாமகாராஜா ஜமீன்தாராக இருந்த காலத்திலே வாழை இலையின் மீது மண்பானையை கவிழ்த்தி அதன்மேல் நடனமாடும் பேரணி எனும் சித்திர நாட்டியமாடிய கொல்லபட்டி பொன்னம்மாளை பாராட்டி இந்த ஜமீன்தார் பொற் பூ பரிசாகக் கொடுக்க சிறப்பை



'சபராஞ்சித சிந்தாமணி' என்னும் நாட்டிய நூலிலே புகழ்ந்து கூறப்பட்டுள்ளது.

## தேசிய திருப்பதி.

ராஜா மகாராஜா காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் தேசிய இயக்கம் பரவி இருந்தது. சுதேசிய இயக்கம் புதிய தெம்புடன் வளர்ந்தோங்கியது. 1911-ம் ஆண்டு மணியாச்சி ஜங்ஷனில் வாஞ்சிநாதன் ஆங்கில கலெக்டர் ஆஷ் துரையை சுட்டுக் கொன்றார் ஆஷ் கொலை வழக்கு எட்டயபுரத்தில் பெரும்பரபரப்பை உண்டாக்கியது. ஏனெனில் அதில் சம்பந்தப்பட்ட பல தேசபக்தர்கள் எட்டயபுரத்தில் தலைமறைவாக இருந்தார்கள். இந்த வழக்கில் எட்டயபுரம் வந்தேமாதரம் சுப்பிரமணியம் என்பவரும் கோர்ட்டில் ஆஜராகி உள்ளார். 1906-ம் ஆண்டு எட்டயபுரத்தில் சுதேசிய நிதி வசூல் மிக மும்முரமாக நடைபெற்றுள்ளது. ஜமீன்தார் உறவினர்களில் ஒருவரான குமாரெட்டு நாயக்கர் அதிக ஊக்கத்துடன் உழைத்து வந்தார். ஜமீன்தாரின் சிறிய தகப்பனார் (நாத்தா மகாராஜ) சுதேசிய நிதிக்கு ரூபாய் 10 அனுப்பினார்.

கல்வி, கலை, இலக்கியம், நாடகம், நாட்டியம், விவசாய வளர்ச்சி, நிர்வாக சீர்திருத்தம் ஆகிய பல துறைகளிலும் வளர்ச்சி பெற்று எட்டயபுரத்தின் பொற்காலத்தை உருவாக்கிய இந்த ஜமீன்தார் 15 ஆண்டுகள் ஆட்சி புரிந்து 1915 டிசம்பர் மாதம் (மார்கழி மாதம் ஏகாதசி தினத்தன்று) தன்னுடைய 37-வது வயதில் காலமானார். இவரது மறைவால் எட்டயபுரம் சோக கடலில் மூழ்கியது. "ஆடு அழுக, மாடு அழுக அஞ்சு லட்சம் ஜனம் அழுக, பட்டத்து யானை எல்லாம் பாதையிலே நின்று அழுக" என்னும் நாட்டுப் பாடல் ராஜா மகாராஜ மறைந்த துயர் நிகழ்ச்சியை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

# 13. நாடகத் துறையில் மறுமலர்ச்சி.

**( 1915 - 1928 )**

எட்ட்யபுரம் வரலாற்றில் பொற்காலத்தை உருவாக்கிய ராஜா மகாராஜா என்று அழைக்கப்பட்ட ஜமீன்தாருக்கு மக்கட்பேறு கிடையாது இதனால் இவருடைய சிறியதந்தையாகிய வெங்கடேஸ்வர எட்டப்பநாயக்கர் 1915ம் ஆண்டு தனது முதிய வதில் ஜமீன்தார் பதவிக்கு வந்தார் முதியவயதில்ஜமீன்தாரனதால் இவரை ஜமீன்மக்கள் 'தாத்தா மகாராஜா' என்று சிறப்புப் பெயரிட்டு அழைத்தார்கள். ஜமீன் நேரிடையாக ஆங்லேயரின் ஆட்சியின் கீழ் இருந்த போதும் (1890–99) அதன் பின் பதவியேற்ற ஜமீன்தார் காலத்திலும் (ராஜா மகாராஜா காலத்திலும்) இவர் எட்டயபுரத்தில் கலை, இலக்கியம், நாடகம், நாட்டியம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் பெரும் பணி ஆற்றினர்.

இவர் காலத்கில், முத்தமிழில் ஒன்ருன நாடகத் தமிழ் வளர்ச்சியுற்றது. இவர். கார்த்தியேக நாடகக் கம்பெனியை நிறுவினர். இந்த நாடக கம்பெனியில் எட்டயபுரத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் சேர்ந்து நாடகங்களில் நடித்தார்கள். ராமாயண காவியத்தை வீ. சாமி அய்யங்கார் 'பாதுகா பட்டாபிஷேக நாடகம்' என்றும் நாடக நூலாக இயற்றினர். இந்நூல் தாத்தா மகாராஜா காலத்தில் வெளியிடப்பட்டது. மேலும் 'பாத்துருகுரியர்' சரித்திரமும் இவர் காலத்தில் நாடகமாக எழுதப்பட்டது.

'தாத்தா மகாராஜா' எனச் சிறப்புப் பெயர் கொண்ட இந்த ஜமீன்தார் நாடகத்துறையில் மிகுந்த



ஈடுபாடு கொண்டிருந்தார். என்பதை மறைந்த நாடக கலைஞர் டி. கே. சண்முகம் 'எனது நாடக வாழ்க்கை' என்ற தனது நூலில் பின்வருமாறு எழுதுகிருர் ......... அரசர் எதிரே (தாத்தா மகாராஜா எதிரில்) ஆள் உயரத்தில் ஒரு படம் சுவரில் மாட்டப்பெற்றிருந்தது வேட்டியை மூலைக்கச்சமாகக் கட்டி காணப்பட்ட உருவத்தை நாங்கள் எண்ணினேம். இதோ இந்தப் படத்தில் இருப்பவர்தான் பிரபல நடிகர் கல்யாணராமையர் பெண்ணை நடிப்பதற்கு அவரைப்போல்இனியொருவர் பிறக்கவேண்டும். பாமா விஜயத்தில் அவர் சத்திய பாமாவாக நடித்தது இன்னும் என் கண் முன்னே நிற்கிறது. அவரது நினைவு மாருதிருக்கவே இந்தப்படத்தை எதிரே வைத்திருக்கிறேன். நானறிந்த வரையில் இவர் ஒருவர்தான் குடிக்காத நடிகர் என்று கூறினர்.

பிறகு கல்யாணராமய்யர் நாடகக்குழுவின் சிறப்பையும். அந்தக்குழுவில் நடிகர்களாக இருந்த ராமுடு அய்யர், சங்கரதாஸ சுவாமிகள், ஆகியோர் பெருமையும் பற்றி நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். பிறகு தம் சமஸ்தானத்தின் வெளியீடாக அச்சிட்ட கல்யாணராமய்யரின் 'பாமா விஷயம்' லதாங்கி ஆகிய இரு நாடகங்களையும் கொண்டு வரச் சொல்லி என் கையில் ஒரு பிரதியும், சின்னண்ணை கையில் ஒரு பிரதியும் கையெழுத்திட்டுக்கொடுத்தார். அன்று இரவு அரசரின் அரண்மனை அரங்கில் மனோகரா நாடகம் வைக்கப் பெற்றிருந்தது. அரசரும், அவரது இளைய புதல்வர் காசி மகாராஜாவும் மற்றும் சில அதிகாரிகளும் மட்டும் கூடியிருந்தார்கள். அவர்களுக்குப் பின்புறம், அந்தப்புறப்பெண்கள் இருப்பதாகப் பேசி கொண்டார்கள். ஆனல் எங்களுக்குத் தெரியவில்லை. பத்துப் பதினைந்து பேர் முன்னிலையில் நாடகத்தை நடிப்பது எங்களுக்கு சின் [illegible] சிரமமாக இருந்தது. அன்று எனக்கும், சின் [illegible] வுக்கும் மிகப்பெரிய பதக்கங்கள் பரிசு அளிக் [illegible] ன. ஒவ்வொரு பதக்கமும் ஆறுபவுனில் செய்யப்பட்டது எனச் சொன்னர்கள்.

இதே போன்றுதான் 'மனோகரன்' நாடகமும் சமஸ்தான நாடகஅரங்கில் நடைபெற்றது. மனோகரன் சங்கிலி அறுக்கும் காட்சியை அந்த அரங்கிலேயே நடிக்கச் சொன்னார் அரசர். எனக்கு என்னவோ போலிருந்தது. பகல்வேளை உடைகள் இல்லை. ஒப்பனை இல்லை. சங்கிலி இல்லை. இரண்டு பேர் மேல் துண்டை, என் கைகளிலேயே கட்டி இழுத்துப் பிடித்துக்கொண்டார்கள். நான் எப்படியோ ஒருவகையாக நடித்தேன். அரசர் தம் பேரரின் கையிலே போட்டிருந்த மோதிரத்தைக்கழற்றி என் கையிலே போட்டார் அவரது போற்றத்தகுந்த கலையுணர்ச்சி, அன்று எனக்குப்புரியவில்லை. இன்று அதன் சிறப்பினை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் இவ்வாறு டி. கே. சண்முகம் நாடக வளர்ச்சிக்கு தாத்தா மகாராஜா புரவலராக திகழ்ந்தார் என்பதை தனது நூலில் விளக்கிக் கூறியுள்ளார்.

**பாரதி எட்டயபுரம் வருகை.**

தாத்தா மகாராஜா காலத்தில்தான் புதுவையில் வாழ்ந்திருந்த தேசீய கவி பாரதி 1919ம் ஆண்டு எட்டயபுரம் வந்து சில நாட்கள் தங்கியிருந்தார். அச்சமயம் தனக்கு உதவிசெய்ய வேண்டி தாத்தா மகாராஜாவுக்கு சீட்டுக்கவி எழுதி அனுப்பினார். ஆனால், அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து பாரதி தேச விடுதலை இயக்கத்தில் தீவிர பங்கு பெற்றிருந்த காரணத்தினால் ஜமீன்தாரால் உதவி செய்ய முடியவில்லை. இருப்பினும் கவிஞரின் நெருங்கிய நண்பரான வெங்கடேஸ்வரட்டுத் தேவர் பாரதிக்கு பல விதங்களில் உதவி புரிந்தார்.

எட்டயபுரத்தில் வாழ்ந்த கட்டையமணியதார் பாரதியின் நெருங்கிய நண்பராக இருந்தார். இவர் ஜமீன்தார் காலத்தில் வாழ்ந்த புலவர்களை ஒன்றிணைத்து 'வித்வத் சபை' ஒன்று அமைத்து இலக்



யங்கள் பற்றி ஆராய்ச்சி செய்ய தூண்டுகோலாய் இவர் விளங்கினார். இவர் காலத்தில் வாழ்ந்த பெண் பாற்புலவராகிய சுப்பம்மாள் 'குமாரகீதம்' என்ற நூலை இயற்றினார். இவரது காலத்தில் எஸ். டி. சண்முகம் பிள்ளை திவானாக இருந்தார்.

தாத்தா மகாராஜா ஆட்சி புரிந்த காலத்தில், சிறந்த இஸ்லாமிக் கவிஞரும், 'சீறாப் புராணம்' இயற்றியவருமான மகாகவி உமறுப் புலவருக்கு 1919ம் ஆண்டு (தமிழாண்டு 1094, தைமாதம்) பிச்சைக் கோனார் என்பவர் உமறுப்புலவரின் சாமதியில் நினைவு சின்னம் எழுப்பினார். இதையொட்டி, அந்தத் தெருவிற்கு உமறுப்புலவர் தெரு எனவும் பெயரிடப்பட்டது.

தாத்தா மகாராஜா மிகவும் எளிமையான வாழ்க்கையை நடத்தியவர். முதிய வயதிலும் ஜமீன் ஆட்சியை மிகத் திறமையாக நிர்வகித்தார். உடற்பயிற்சியில் சிறந்த வல்லுநர். இவர் 13 ஆண்டுகள் ஆட்சி புரிந்து 1928ம் ஆண்டு காலமானார்.

2/7/29.



# 14. அண்ணல் காந்தியடிகள் வருகை.

**(1928-1934)**

'தாத்தா மகாராஜா' மரணத்திற்குப் பின்பு, அவருடைய இரண்டு புதல்வர்களில் மூத்தவரான தங்கசாமிபாண்டியன் என்ற ஜெகவீரராம குமார வெங்கடேஸ்வர எட்டப்ப நாயக்கர், 1928ம் ஆண்டு ஜமீனை பொறுப்பேற்றார். இவர் சிறந்த நிர்வாகி. ஜமீன் நிர்வாக சம்பந்தமான ரிக்கார்டுகளை நுண்ணிய அறிவுடன் ஆராய்ந்து உத்திரவுகள் இடுவதில் மிகத் திறமைசாலி. இதற்குக்காரணம், ராஜா பட்டம் பெற்ற ராஜா மகாராஜா ஜமீன்தாராக இருந்த காலத்தில் அருவக்குதங்கசாமிபாண்டியன் செயலாளராக இருந்து திவான் செய்யும் வேலைகளை இவரே முன்னின்றுசெய்தார். இவ்வாறு தனது இளமைக் காலத்திலிருந்தே நிர்வாகத் திறமையுடையவராக திகழ்ந்தார்.

இவரது ஆட்சி காலத்தில் குருகுஹதாஸ் பிள்ளை 'திருநெல்வேலி சீமைச் சரித்திரம்' என்ற வரலாற்று நூலை எழுதிவெளியிட்டார். எட்டயபுரம் ஜமீன் பகுதியிலும், சுற்றுப்புற கிராமங்களிலும் இந்திய விடுதலை இயக்கம் விரிந்துபரவியது. திருநெல்வேலியில் நாவலர் சோமசுந்தர பாரதியாரின், முயற்சியால் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. அதையொட்டி, தமிழகம் முழுவதும் ஹரிஜன் நலநிதிதிரட்ட மகாத்மாகாந்திஜி பிரயாணம் செய்தார். அவ்வமயம் நாவலர் முயற்சியால் 25—1—1934ம் ஆண்டு அண்ணல் காந்திஜி எட்டயபுரம் வருகை புரிந்தார். எட்டயபுரம் மக்கள் காந்திஜியை மிகஉற்சாகத்துடன் வரவேற்றார்கள். பேரூராட்சி மன்றத்தின் சார்பில் காந்திஜிக்கு வரவேற்பளிக்கப்பட்டது. காந்திஜியின் ஹரிஜன நலநிதிக்கு எட்டய



புர பொதுமக்கள் பண முடிப்புக் கொடுத்தார்கள். எட்டயபுரம் ஜமீன் பகுதிகளில் பிற்காலத்தில் தேசிய இயக்கம் பரவ காந்தியடிகள் வருகை முக்கிய காரணமாய் அமைந்தது

சிறந்த நிர்வாகியாவும், தனது சகோதரர் காசி விஸ்வநாத பாண்டியரின் கலைப்பணிக்கு உறுதுணையாகவும் விளங்கிய தங்கசாமி பாண்டியன் 1934ல் காலமானார்

## கலைக் காவலர் காசி வில்வநாதபாண்டியன்

தங்கசாமி பாண்டியன் என்ற ஜமீன்தாரின் சகோதரரான காசி விஸ்வநாத பாண்டியன் சிறந்த ஓவியக்கலைஞர் புகைப்படங்கள் பிடிப்பதில் நிபுணர். இசைக்கலையிலேயே தேர்ந்தவர். இவரது அரண்மனையிலே எப்போதும் இன்னிசை முழங்கிக் கொண்டே இருக்குமாம். இவர் தீட்டிய அற்புதச்சித்திரங்கள் அரண்மனைச் சுவர்களை அழகுபடுத்தி நிற்கும் இசைக் கலைஞர்களுக்கும், நாடகக் கலைஞர்களுக்கும் பரிசுப் பொருள்களை வாரி வாரி வழங்கிய வள்ளல் என இவரைக் கூறலாம். இவரது அரண்மனையே ஒரு கலைப்பெட்டகமாக திகழ்ந்தது இவர் 'தேவராஜ ஜெகதீச பாலகானசபை' என்ற நாடகக் கம்பெனியை துவங்கினார். இதன் மூலம் பல இளைஞர்களை நாடகத்தில் பங்கேற்ற வைத்தார். சகா டி. வி. நாராயணசாமி, வெங்கிடாசலம், இ. ஆர். தேவன் ஆகியோர் இந்தக் கம்பெனியின் நாடகங்களில் நடித்தவர்கள் தன்னால் வரையப்பட்ட சித்திரங்களையே திரைகளாகப் பயன்படுத்தி, நாடக கதாபாத்திரங்களுக்கேற்ற நடிகர்களைப் பொருக்கி எடுத்து நடிக்க வைப்பதில் இவர் வல்லவர். இவரின் வேண்டுகோளுக்கிணங்க, டி. கே. சண்முகம் குழுவினரின் "இரத்தின வளி" நாடகம் எட்டயபுரத்தில் நடைபெற்றது. இந்த [illegible]தில் நடித்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ண[illegible] வைரக்கற்கள் பதித்த தம் கடிகாரத்தையே

இவர் அன்பளிப்பாக கொடுத்தார் சாத்தூரில் டி.கே. சண்முகம் குழுவினரின் நாடகம் நடைபெற்றபோது தினந்தோறும் காசிபாண்டியன் சென்று பார்த்ததாக டி. கே. சண்முகம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இவரது கலை ஆர்வத்தை டி. கே. சண்முகம் பின்வருமாறு கூறுகிறார்.

“ ... ... ஒருநாள் மனோகரா நாடகத்தின்போது சின்னண்ணா உடுத்தியிருந்த புடவை அவருடைய மனத்திற்கு திருப்தியளிக்கவில்லை. தம் மனைவியின் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னார். அந்த அம்மையார் காருக்குச் சென்று மற்றொரு சாதாரணப் புடவையை உடுத்திக்கொண்டு திரும்பி வந்தார். அவர்கள் முதலில் உடுத்தியிருந்த விலையுயர்ந்த பட்டுப்புடவை சின்னண்ணாவுக்கு பரிசாக வழங்கப்பட்டது அடுத்த காட்சியில் அதை உடுத்திரவும் கட்டளை பிறந்தது. இவ்வாறு காசி விஸ்வநாத பாண்டியனின் கலையார்வத்தையும், கலைஞர்களை ஆதரிக்கும் தன்மையையும் டி. கே. சண்முகம் தனது ‘‘நாடக வாழ்க்கை’’ என்ற நூலில் வெகுவாக புகழ்ந்து எழுதியுள்ளார். பின்னர் டி. கே. சண்முகம் நாடகக் கம்பெனியைக் கலைத்து விடும் நிலை எழுந்த போது, காசிப்பாண்டியன் தன்னிடமிருந்தப் நாடகப் பொருள்களையும் சில திரைகளையும் டி.கே.எஸ். நாடகக் குழுவினருக்கு அளித்து மீண்டும் கம்பெனியைத் தொடங்க உதவி புரித்தார்.

காசிவிஸ்வநாத பாண்டியன் ‘தயாளன்’ என்ற நாடகம் என்ற நாடகம் எழுதியுள்ளார். அது இவரது நாடக அரங்கில் அரங்கேறிது பின்பு இதே நாடகம் திரைப்படயாக எடுக்கப்பட்டடது. இவரது நாடக அரங்கு பின்னாளில் திரைப்பட அரங்காக திருத்தப்பட்டது.



**காங்கிரஸ் கமிட்டி உதயம்**

தேசியப்பற்றுமிகுந்த காசிவிஸ்வநாதபாண்டியன் தனது திரைப்பட அரங்கிற்கு ‘பாரதமாதா டாக்கீஸ்’ எனப்பெயரிட்டு அழைத்தார். இந்தப் திரைப்படத் அரங்கில் திரைப்படக்காட்சி நடைபெறுவதற்கு முன்னால். சிங்கத்தின் அருகில் பாரதமாதா நிற்க, கையில் தேசீயக்கொடியுடன் உள்ள சிலைடு காட்டப்படும். அத்துடன் காட்சிக்கும் முன்னர் பங்கிம்சந்திரர் எழுதிய வந்தேமாதரம் பாடல் இசைத்தட்டும் முதலில்ஒலிபரப்பபடும். ஆங்கிலேய அரசு இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தொடர்ந்து இதைச் செய்தார்.

இதுதவிர, இந்தப்பகுதியில் நடைபெறும் காங்கிரஸ் மாநாடுகள் இவரின் ஆதரவோடு நடைபெற்றன 1924ம் ஆண்டு முதன் முதலில் இவரது திரைப்பட அரங்கில்தான் எட்டயபுரம் நகர காங்கிரஸ் கமிட்டி தோன்றியது இந்தக்கமிட்டிக்கு வட்டக்கடை திருமலை அய்யங்கார் தலைவராகதேர்த்தெடுக்கப்பட்டார் மேலும் திரு ஸ்ரீநிவாசக அய்யங்கார், கு. மாரியப்ப நாடார், செல்லையா மூப்பனார், சி. எஸ். நரசிம்மராவ், எஸ், எம். பி. கிருஷ்ணன்செட்டியார், துரைராஜ்நாடார், டெயிலர் சண்முக மணியகாரர், சண்முகவேல் சேர்வைகாரர் மற்றும் பலரும் இந்தகமிட்டியில் அங்கம் வகித்தார்கள்

இவ்வாறு கலை வளர்ச்சிக்கும், தேசீய இயக்கத்திற்கும் அரும பணியாற்றிய காசி விஸ்வநாதபாண்டியன் 1940ல் காலமானர்



## 15. பாரதி மண்டபம் உதயம்

**(1934-1954)**

தங்கசாமி பாண்டியனின் ஒரே புதல்வரான முத்துக்குமார வெங்கடேஸ்வர எட்டப்பன் 1934ம் ஆண்டு ஜமீன்தார் பதவிக்கு வந்தார். இவரது காலத்தில் ஓய்வு பெற்ற கோட்டாட்சித் தலைவரான லோடிகான் சாஹிப். ஸ்ரீநிவாசச்சாரி வெங்கட்ராமய்யர்ராமன் நாயர் ஆகியோர் திவான்களாக பணியாற்றினார்கள். லோடிகான் சாஹிப் காலத்தில்தான் இந்த ஜமீன்தாருக்கு திருமணம் நடைபெற்றது.

இவர் சிறந்த சங்கீத ரசிகர், தொழில் நுட்ப வல்லுநர். பொறியியல் மின்சாரம், மற்றும் மோட்டார் வாகனத் தொழில் துறைகளில் மிகத் தெளிவான ஞானமுடையவர் இவரது காலத்தில்தான், 1940ம் ஆண்டு எட்டயபுரத்திற்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டது இவர் சிறந்த கட்டிடக்கலைஞர் இவரே கட்டிடங்களுக்குண்டான வரை படத்தை வரைந்து புதிய புதிய மோதரில் கட்டிடங்கள் கட்டினார். இவரதுகாலத்தில் ஜமீன் அலுவலகம், சிங்காரத்தோப்பு, கோபால் பக்)திரைப் பட அரங்கு, ஏகாதேசி மண்டபம் ஆகியன நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்டன

தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்களான பண்டிதமணி கதிரேசன் செட்டியார், வெள்ளக்கால் சுப்பிரமணியபிள்ளை, ரா. பி. சேதுப்பிள்ளை, உமாமகேஸ்வரன் பிள்ளை ஆகியோர் எட்டயபுரத்திற்கு வந்து தமிழ் ஆராய்ச்சி செய்துவந்தார்கள். இந்த புலவர்களையெல்லாம் நாவலர்சோமசுந்தர பாரதியார்தான் எட்டயபுரம் அழைத்து வந்தார். நாவலரும், நாகூர்முத்துப்புலவரும் எட்டயபுரத்தில் புலவர்களாக திகழ்ந்தார்கள்.



நாவலர் 'மாரிவாயில்' மங்கலக்குறிச்சி பொங்கல் நிகழ்ச்சி' ஆகிய கவிதை நூல்களும், தொல்காப்பிய உரை' 'திருவள்ளுவர் ஆராய்ச்சி' கைகேயியின் நிறையும் தயரதன் குறையும்'' போன்ற இலக்கிய திறனாய்வு நூல்களும் எழுதி வெளியிட்டார். எட்டயபுரத்தில் தனது இல்லத்தை 1935ம் ஆண்டு(தமிழாண்டு 1111) நவீன முறையில் கட்டி அதை 'தமிழகம்' எனப் பெயரிட்டு அழைத்தார் இந்த புதுமனை புகுவிழாவிற்கு வ. உ. சிதம்பனாரை நாவலர் அழைத்து இருந்தார். சுதேசிய கம்பல் கம்பெனியில் ஆட்சிப் பொறுப்பாளராக சிலகாலம் நாவலர் இருந்தார்.

### ஆலயப் பிரவேசம்

இந்த ஜமீன்தாருக்கு தேசீய இயக்கத்தில் பங்கு கொண்ட பெரும் தலைவர்களான ராஜாஜி, கிருஷ்ணசாமி பாரதி, வைத்தியநாத ஐயர், கல்கி ஆகியோடன் நெருங்கிய நட்பு உண்டு இந்த நட்பின் காரணமாக, 1945ம் ஆண்டு எட்டயபுரத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயப் பிரவேசம் நடைபெற்றது. ராஜாஜி தலைமையில் நடைபெற்ற இந்த ஆலயப்பிரவேசநிகழ்ச்சியில் மா. பொ. சிவஞான கிராமணியார், வைத்தியநாத அய்யர், கிருஷ்ணசாமி பாரதி மற்றும்தமிழகத்தின் தலை சிறந்த தேசபக்தர்கள் பலர் கலந்து கொண்டார்கள். ஜமீன்தாரின் குடும்ப ஆசிரியரும், சிறந்த தேசபக்தருமான கட்டாலங்குளம் சிவத்தச்சாமி ஆலயப் பிரவேசம் நடைபெற ஜமீன்தாருக்கு உறுதுணையாக இருந்தார்.

இக்கால கட்டத்தில் எட்டயபுரத்திலும் ஜமீன் சுற்றுப்புறங்களிலும் விடுதலை இயக்கம் வீறுகொண்டெழுந்தது எட்டயபுரம் பாரதமாதா திரையங்கில் காங்கிரஸ் அரசியல் மாநாடு நடைபெற்றது டாக்டர் வரதராஜுலு நாயுடு, மட்டப்பாரை வெங்கட்ராமய்யர். சோமையாஜுலு ஆகியோர் இம்நாட்டில் பங்கு கொண்டார்கள். இதையடுத்து, எட்டயபுரம் நகர காங்கிரஸ்

கமிட்டியும் விறுவிறுப்புடன் இயங்கியது. ஆண்டு
தோறும். செப்டம்பர் மாதம் 11ந் தேதி எட்டயபுரம்
வாசி செல்லையா மூப்பனர் பாரதியார் படங்களை தெரு
வெல்லாம் பாடிவந்து கவிஞருக்கு அஞ்சலி செய்து
வந்தார். இவர் ஒரு தேசபக்தர் காந்திஜியின் தனிநபர்
சத்தியாக்கிரக போராட்டத்தில் பங்குகொண்டு சிறை
சென்றார். இதன்பின்பு. முத்துக்கருப்பன்மற்றும் பலரும்
சிறை சென்றார்கள். கடலையூரில 1942 ஆகஸ்டு வெள்
ளையனே வெளியேறு போராட்டத்தில் பங்குகொண்ட
மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் நடைபெற்றது.
கைத்தறி நெசவாளர்கள் கைது செய்யப்பட்டார்கள்.
எட்டயபுரத்தில் பிறந்த எஸ். ஏ. அய்யர் இந்திய
தேசீய ராணுவத்தில் மிகத் தீவிரமாக செயல்பட்டார்.
நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஜனாதிபதியாகக்
கொண்ட முதல் இந்திய சுதந்திர சர்க்காரில் (ஆஜாத்
இந்து சர்க்கார்) பிரச்சார மந்திரியாக பணியாற்றினார்.

**பாரதி மண்டபம்**

ஜமீன்தாருக்கு ஏற்கெனவே இலக்கிய அறிஞர்
களுடன் ஏற்பட்ட பிணைப்பின் காரணமாக பிற்காலத்
மகாகவி பாரதிக்கு மணிமண்டபம் எழுப்ப இவர் பேரு
தவிபுரியத் தொடங்கினார் இக்காலகட்டத்தில் பாரதி
அன்பர்கள் சேர்ந்து 'பாரதி இலவச வாசகசாலை'
'பாரதி இலக்கிய மன்றம்' ஆகியன தோற்றுவித்தார்
கள். பாரதி இலவசவாசகசாலையைச் சேர்ந்த அன்பர்
களால் 1943ம் ஆண்டு நடத்தப்பட்டபாரதிவிழாவுக்கு
கிருபானந்தவாரியார், நாகர்கோவில் ஆறுமுகநாவலர்
மற்றும் பல தமிழ் அறிஞர்கள் வருகை புரிந்தார்கள்.
இந்த வாசகசாயினரின் வேண்டுகோளுக் கிணங்க
கே. பி. சுந்தரம்பாள் இன்னிசைக் கச்சேரியின் மூலம்
பாரதியார் நினைவுச் சின்னத்திற்கு நிதி திரப்பட்டது.

இதற்கிடையே பாரதி இலக்கிய மன்றத்தார்
'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தியை இலக்கிய
கூட்டத்திற்கு அழைத்தார்கள். இக்கூட்டத்தில் கலந்து



கொள்வந்த கல்கி தலைமையில் மன்னரின் மைத்துனர்
அமிர்தசுவாமி அரண்மனையில் பாரதி நினைவுமண்டபம்
எழுப்ப பூர்வாங்க ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.
இக்கூட்டத்தின் முடிவாக, பாரதிமணி மண்டபம்
எழுப்பநிதி கோரி கல்கி 1944ம் ஆண்டு வேண்டு
கோள் விடுத்தார் இந்த வேண்டுகோளுக் கிணங்க
தமிழ் மக்கள் நிதியினை வாரி வழங்கினார்கள். கடல்
கடந்து வசிக்கும் தமிழ்மக்கள் இந்த நிதிக்கு அன்
பளிப்பு வழங்கினார்கள். இதனால் 1945 ஜூன் மாதம்
3ம் தேதி பாரதி மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டு
விழா ஜமீன்தார் தலைமையில் நடைபெற்றது. ராஜாஜி
அடிக்கல் நாட்டினார். இவ்விழாவிற்கு மகாத்மாகாந்தி
யடிகள் கவிக்குயில் சரோஜினிநாயுடு, புலபாய்தேசாய்
தேவதாஸ் காந்தி வாழ்த்துரை அனுப்பினார்கள். பாரதி
மணி மண்டபம் நிறுவ ஜமீன்தார் நிலமளித்து ரூபாய்
501 அன்பளிப்பும் நல்கினார். இச்சமயத்தில் திருச்சி
யில் டி.கே.சண்முகம் குழுவினர் நடத்திய ஔவையார்
நாடகத்தின் ஒரு நாள்வசூல் ரூ. 1140 அடிக்கல் நாட்டு
விழா செலவிற்கு நிதியாக வழங்கப்பட்டது.

பாரதிமணி மண்டபப் பணி மிகத்துரிதமாக
நடைபெற்றது கட்டிடக்கலைஞர் சித்தாலே மணிமண்
டப கட்டிடத்திற்கான வரைபடத்தை வரைந்தளித்
தார். பாரதி மணிமண்டபம் நிறுவும் இத்திருப்பணியில்
ஜமீன் வாழ்மக்களும் பங்கு கொள்ள வேண்டுமென்ப
தற்காக ஜமீனில் வாழ்ந்த விவசாய மக்கள் தங்களு
டைய வண்டிகளில் கட்டிட வேலைக்காக மணலேற்றி
வந்து குவித்தார்கள். இத்துடன் உலகெங்கிலுள்ள
தமிழ்மக்கள் வாரி வழங்கிய நிதியாலும் மணி மண்டப
வேலை மிக வேகமாக நடந்தேறியது. ஜமீன்தாரின்
நேரடிப் பார்வையில் மண்டபவேலை நடைபெற்றது.
இம்முயற்சிக்கு பாரதி இலக்கியமன்ற அன்பர்களும்
வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்தார்கள்.
இவ்வாறு பெருமுயற்சியால் எழுப்பப்பட்ட மகாகவி
பாரதி மணிமண்டபம். 1947ம் ஆண்டு அக்டோபர்

மாதம் 13ந் தேதி நடைபெற்ற பாரதி விழாவின்போது அன்றைய தினம் மேற்கு வங்க கவர்னராக இரு ராஜாஜியினால் திறந்து வைக்கப்பட்டது. இந்த விழா தேசீய தலைவர்கள், அமைச்சர்கள், இலக்கிய அறி கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகியோர் பங்குகொ சிறப்பித்ததுடன் உலகம் முழுவதும் உள்ள தமிழ்மக் விழாவில் கலந்து கொண்டார்கள். இதன்பின்பு, ம மண்டப நிர்வாகக் குழுவிற்கு ஜமீன்தார் கௌர தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். (தமிழ் மக்க நீண்ட நாள் கோரிக்கைக்கு இணங்க தமிழக அ 12—5—1973ம் ஆண்டு மகாகவி பாரதியார் பிற இல்லத்தை அரசுமேற்கொண்டுவரலாற்றுச் சின்னம ஆக்கியது.)

V2148.E


## தீக்ஷிதர் ஆராதனை மண்டபம்

இது தவிர வி. எஸ். மணி அய்யரின் முயற்சிய 1946ஏப்ரல் 5, 6, 7தேதிகளில் மூன்றுநாட்கள் மு சாமி தீக்ஷிதர் விழா எட்டயபுரத்தில் நடைபெற்ற காலஞ்சென்ற உயர் நீதிமன்ற நீதிபதி டி.எல்.வெங் ராமமய்யர் தலைமையில் டைகர் வரதாச்சாரியார் வைத் துவக்கி வைத்தார். 1946 ஏப்ரல் 7ம் தே முத்துசாமி தீக்ஷிதருக்கு நினைவு மண்டபம் எழு ஜாமீன்தார் அடிக்கல் நாட்டினார் ஆனால் இது முற் பெறவில்லை (இருப்பினும் திருநெல்வேலிமாவட்ட ஆ த்தலைவராயிருந்த திரு. சண்முகசிகாமணி முயற்சி 22—8—1973ல் தீக்ஷிதர் மண்டபம் கால்கோள் யப்பட்ட இடத்தில் சங்கர் சிமிண்ட் நிறுவனத் தீக்ஷிதருக்கு ஆராதனை மண்டபம் எழுப்புள்ளார்கள்


## இந்தியக் குடியரசில் எட்டயபுரம்

நாடு விடுதலை அடைந்தபின்பு இந்தியாவிலுள் சமஸ்தானங்கள், ஜமீன்கள் முதலியவற்றை அர மேற்கொள்ளும் சட்டத்திற்கு இணங்க, எட்டயபுர ஜமீனும் சென்னை சர்க்காரால் எடுத்துக் கொள்ள பட்டது. சுமார் 3½ லட்சம் வருமானமுள்ள எட்டயபுர ஜமீன் நிர்வாகத்தை 26—9—195[illegible] திவான் ராமன் நாயர், அப்[illegible] கலெக்டராக இருந்த [illegible]சென்ற வி. நடராஜனிடம் ஒப்படைத்தார்.


217129.




பாரதி வீடு.



உமறுப் புலவர் தர்கா.



முத்துசுவாமி தீட்சிதர் மண்டபம்.



பாரதி மண்டபம்.